# தரிசனங்களும் தீர்க்கதரிசனங்களும்

1

சகோ. பிரன்ஹாம் அவர்களின் மேற்கோள்கள்

(படங்களுடன்)

# தீர்க்கதரிசனம் 1



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# புத்தகத்தின் தலைப்பு: **இருபதாம் நூற்றாண்டு தீர்க்கதரிசி**

அவருடைய (சகோ. பிரன்ஹாமுடைய) தனிப்பட்ட ஊழியத்தின் தொடர்பாக அவர் தரிசனங்களை கண்டு, அவை நிறைவேறின என்பது மாத்திரமல்ல, கிறிஸ்துவின் வருகைக்கு முன்பாக நிகழவிருக்கும் சம்பவங் களையும் அவர் தரிசனத்தில் கண்டு, அவை களை அவர் வெளிப்படையாய் உரைத்திருக் கிறார். இவைகளில் மிக முக்கியமாக கருதப் படுபவை பின்வரும் ஏழு சம்பவங்களாம்.

1933ம் ஆண்டு ஜுன் மாதம் அவர் பழைய மேசன்களின் பழைய கூடத்தில் கூட்டங்கள் நடத்திக் கொண்டிருக்கையில், கர்த் தருடைய வருகைக்கு முன்பு நிகழவிருக்கும் ஏழு முக்கியமான சம்பவங்களை அவர் தரிசனமாகக் கண்டார். ஜுன் மாதம் ஒரு நாள் காலையில் அவர் ஞாயிறு பள்ளி வகுப்புக்கு போதிப்பதற்கு முன்பு அவர் ஆவிக்குள்ளா யிருந்த போது, இந்த சம்பவங்கள் வரிசையாக

தரிசனத்தில் காணப்பட்டன. இத்தாலியா நாட்டின் சர்வாதிகாரி பெனிடோ முசோலினி எத்தியோப்பியாவின் மீது போர் தொடுப்பான் என்று அவர் தரிசனம் கண்டார். அப்பொழுது ஒரு சத்தம் அவரிடத்தில், "எத்தியோப்பியா அவனுடைய (முசோலினியின்) கால்களில் விழும்" என்றுரைத்தது. இருப்பினும், அந்த சத்தம் தொடர்ந்து, அந்த சர்வாதிகாரி பயங்கரமான முடிவை அடைவான் என்றும், அவனுடைய சொந்த ஜனங்கள் அவன் மேல் உமிழ்வார்கள் என்றும் தீர்க்கதரிசனமாக முன்னுரைத்தது.

இதற்கடுத்து உண்டான தரிசனத்தில், ஆஸ்திரியா நாட்டைச் சேர்ந்த அடோல்ஃப் ஹிட்லரை தலைமையாகக் கொண்ட ஜெர்மனி யுடன் அமெரிக்கா போரில் ஈடுபடும் என்பதைக் காண்பித்தது. அப்பொழுது எழுந்த சத்தம், இந்த பயங்கரமான போர் ஹிட்லரை மடங்கடித்து, அவனுக்கு மர்மமான முடிவு உண்டாகும் என்று முன்னுரைத்தது. இந்த தரிசனத்தில், அவருக்கு '**லீக்ஃபிரிட் எல்லை**'

காண்பிக்கப்பட்டு, அங்கு அநேக அமெரிக்கர் கள் உயிரிழப்பார்கள் என்று அறிவிக்கப்பட்டது.

இந்த தரிசனத்துடன் தொடர்பு கொண்ட மற்றொரு தரிசனம், ஜனாதிபதி ரூஸ்வெல்ட் ஜெர்மனியுடன் போர் தொடுப்பார் என்றும் அதன் விளைவாக அவர் நான்காம் முறை யாக ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்படுவார் என்றும் முன்னுரைத்தது இங்கு குறிப்பிடத் தக்கது.

தரிசனத்தின் மூன்றாம் பாகம், இவ்வுல கில் பாசீசம், நாசீசம், கம்யூனிஸம் என்னும் மூன்று கொள்கைகள் காணப்பட்ட போதிலும், முதல் இரண்டு கொள்கைகள் ஒன்றுமில் லாமல் போய், கம்யூனிஸம் மட்டும் தழைத் தோங்கும் என்பதைக் காண்பித்தது. பாசீசமும் நாசீசமும் கம்யூனிஸத்தில் முடிவடையப் போவதால், இனி வரவிருக்கும் நிகழ்ச்சிகளின் காரணமாக, அவர் ருஷியாவின் மேல் கண்ணோட்டமாய் இருக்க வேண்டுமென்று அந்த சத்தம் அறிவுறுத்தியது.

அவருக்குண்டான நான்காம் தரிசனத்தில் யுத்தத்துக்குப் பின்பு தொழில்நுட்பத் துறையில் (technology) ஏற்படவிருக்கும் பிரம்மாண்டமான முன்னேற்றங்களைக் குறித்து முன்னுரைக்கப் பட்டது. அதற்கு அடையாளமாக, பிளாஸ்டிக்கி னால் செய்யப்பட்ட கூரையைக் கொண்ட முட்டை வடிவமுள்ள ஒரு மோட்டார் வாகனம் யாரும் அதை ஓட்டாமலே தூரத்திலிருந்து முழுவதுமாக இயக்கப்பட்டு (remote control) அழகான நெடுஞ்சாலைகளின் வழியாய் போய்க் கொண்டிருந்தது. அந்த வாகனத்துக்கு திருப்பும் சக்கரம் (Steering Wheel) இருக்க வில்லை. அந்த வாகனத்தில் சென்று கொண் டிருந்தவர்கள் 'செக்கர்ஸ்' (checkers) போன்ற ஏதோ ஒரு விளையாட்டை விளையாடிக் கொண்டிருப்பது போல் காணப்பட்டது.

50. அவருக்குத் தோன்றின ஐந்தாம் காட்சி உலகத்தின் ஸ்திரீகளுடன் சம்பந்தப்பட்ட தாயிருந்தது. அந்த காட்சியில் ஸ்திரீகளின் நல்லொழுக்கம் வேகமாக சிதைந்து கொண்டு வருவது காண்பிக்கப்பட்டது. அவள் தனக்களிக் கப்பட்ட வோட்டுரிமையின் மூலம் சுதந்தரம்

என அழைக்கப்படுவதை பெற்று உலக விவகாரங்களில் பிரவேசிக்கத் தொடங்கின பிறகு, விரைவில் தன் உடலை அதிகமாக வெளிப்படுத்தும் உடைகளை உடுத்த ஆரம்பித் தாள். அவள் தன் தலைமயிரைக் கத்தரித்துக் கொண்டு ஆண்களின் உடைகளை அணிந்து கொண்டாள். முடிவில் அந்த தரிசனத்தில் அவள் ஏறக்குறைய முழு நிர்வாணியாய், அத்திஇலை வடிவிலும் அளவிலும் உண்டாக் கப்பட்ட ஒரு மிகச்சிறிய துணியால் அவளை மறைத்துக் கொண்டிருந்தாள். அவளுடைய பெண்மை தரம் குறைவாக எண்ணப்பட்டு, தேவனுடைய வார்த்தை உரைத்துள்ளபடி மாம்சமான அனைத்தின் மேலும் பயங்கரமான ஒரு சிதைவு உண்டாகி, அதனுடன் கூட சீர்குலைதலும் உண்டானது.

அதன்பிறகு, சிறப்பாக உடுத்தியிருந்த மிகவும் அழகான ஒரு பெண் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் தோன்றினாள். மிகுந்த அதிகாரம் அளிக்கப்பட்டது. அவளுடைய தோற்றம் மிகவும் அழகாக இருந்தபோதிலும், விவரிக்க இயலாத ஒரு கடினத்தன்மை

அவளில் காணப்பட்டது. அழகுள்ள அவள், மிகக் கொடூரமும், பொல்லாப்பும், தந்திரமும் நிறைந்தவளாயிருந்தாள். அவள் தன் அதிகாரத்தை நாடெங்கிலும் பிரயோகித்து, ஜனங்களின் மீது முழு ஆதிக்கம் செலுத்தினாள். இத்தகைய ஒரு பெண் எழும்புவாள்; அல்லது தரிசனத்தில் காண்பிக்கப்பட்ட இந்த பெண், வேதத்தில் ஸ்திரீயாக சித்தரிக்கப்பட்டுள்ள ஒரு ஸ்தாபனத்துக்கு அடையாளமாயிருக்கக் கூடும் என்பதை அந்த தரிசனம் உணர்த்தினது. அவள் யாரென்பதை ஒரு சத்தம் உரைத்து வெளிப்படுத்தாமல் போனாலும், வேகமாக எழும்பி வரும் ரோமன் கத்தோலிக்க சபைக்கு இந்த ஸ்திரீ எடுத்துக்காட்டாய் இருக்கக் கூடும் என்று அவருடைய இருதயத்தில் தோன்றினது. அவர் எழுதிவைத்த இந்த தரிசனத்தின் முடிவில், இது ஒருக்கால் கத்தோலிக்க சபையாய் இருக்கலாம் என்னும் குறிப்பை எழுதியுள்ளார்.

51. இன்னும் ஒருமுறை பார்க்கும்படி அந்த சத்தம் அவருக்கு உத்தரவிட்டது. அவர் திரும்பிப் பார்க்கையில் ஒரு பெரிய வெடி அமெரிக்க தேசம் முழுவதையும் பாழாக்கி,

அழிந்து போன அந்த இடம் புகைக்காடாய் காணப்பட்டது. கண்கள் காணும் தூரம் வரைக் கும் அது குழிகளும் புகைந்து கொண்டிருக்கிற குப்பைகளும் நிறைந்து காணப்பட்டது. மனிதர் எவருமே காணப்படவில்லை.

அதன்பிறகு தரிசனம் மறைந்தது.

★★★★★

# தீர்க்கதரிசனம் 2

தீர்க்கதரிசனம்
வார்த்தைக்கு
வார்த்தை
அப்படியே
நிறைவேறுதல்



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# செய்தி: **தேவனை அணுகும்விதம்,**

## ஜனவரி 23, 1955, சிகாகோ, இல்லினாய்ஸ், அமெரிக்கா

71. கொஞ்ச காலத்திற்கு முன்பு - மார்பகம் கொண்டவர், எல்ஷடாய் என்பதை நான் முடிப்பதற்கு முன்பாக சிந்தித்துப் பார்க்கிறேன். ஓ, (அனேக) வருடங்களுக்கு முன்பு, கர்த்தருடைய தூதனானவர் எப்போதும் எனக்குத் தரிசனமாவார். ஒரு இரவில், நான் என்னுடைய அறையில் உட்கார்ந்து, ஜெபித்துக் கொண்டிருந்தேன், அல்லது சரியாகச் சொன்னால், என்னுடைய தாயாரின் வீட்டில் இருக்கும் போது. என்னுடைய தாயார் ஒரு பழைமை நாகரீகமான நாட்டுப்புற பெண்மணி ஆவார்கள். அவர்கள் தங்கள் துணிகளைத் துவைத்து, மூலையில், ஒரு நாற்காலியின் மேலிருந்த ஒரு பெரிய கூடையில் வைத்திருந்தார்கள், அந்தத் துணிகளை ஒரு நாற்காலியில் போடுவார்கள். நான்-நான்... அது சரியாக நான் என்னுடைய மனைவியை இழந்த பிறகு, ஏறக்குறைய மூன்று அல்லது நான்கு வருடங்கள் கழித்து, நான் அவைகளை ஒன்றாகக் கூட்ட முயன்று கொண்டு, உள்ளே நுழைந்து, நான்,

“அம்மா, நான்-நான்-நான் உங்களிடம் சிறிது நேரம் பேச விரும்புகிறேன்” என்றேன்.

72. அவர்கள், “பில்லி, உட்கார்” என்றார்கள். நான் உட்கார்ந்தேன், நாங்கள் கர்த்தரைக் குறித்துப் பேசிக் கொண்டிருந்தோம். இப்படியிருக்க நான் வேறொரு அறைக்குள் சென்று, “அம்மா, நான் சிறிது நேரம் ஜெபிக்க வேண்டும் போல் உணருகிறேன்” என்றேன்.

அவர்கள், “நல்லது, உனக்கு நீயே உதவி செய்து கொள்” என்றார்கள். நான் அந்த அறைக்குள் சென்று, அங்கே முழங்கால்படியிட்டு, ஜெபிக்கத் தொடங்கினேன். நான் ஏறக்குறைய ஒரு மணி வரைக்கும் ஜெபித்தேன். பிறகு நான் எழுந்து, “நல்லது, நான் மேல் வீட்டிலிருக்கிறதைக் குறித்து வியப்படைவேன் என்று நம்புகிறேன்” என்று நினைத்தேன். பிறகு, நான் அந்த மூலையை நோக்கிப் பார்த்து, தாயாருடைய ஆடைகள் வைக்கப்பட்டிருந்த நாற்காலியைக் காண்கிறதாக நினைத்தேன், (அங்கே) ஏதோவொன்று வெண்மை நிறமாயிருந்தது, ஆனால் அதற்குப் பதிலாக அங்கே இருந்தது அந்த ஒளியாக இருந்தது, அது அசைந்து கொண்டே, என்னை நோக்கி வந்து கொண்டிருந்தது.

அது என்மேல் வந்த போது, நான் நோக்கிப் பார்த்து, நாம் "shotgun" **வீடு என்று அழைக்கும் ஒரு சிறிய பழைய வீட்டைக்** கண்டேன், **அந்த வீட்டில் நேராக ஒரே வரிசையில் இரண்டு அல்லது மூன்று சிறிய அறைகள் இருந்தன**. எனவே... நான் அதை நோக்கி நடந்தேன், தெற்கிலிருந்து வடக்கு நோக்கிப் போய்க் கொண்டிருந்தேன். நான் அந்த இடத்திற்குள் போன போது, **சுவரில் சிகப்பு நிற தாள் இருந்தது**, அங்கே **ஒரு சிறிய பழைய விளம்பரத் தட்டினால் ஆன கட்டில்** (poster bed) **இருந்தது**, அங்கே **ஒரு சிறிய பையன் படுத்திருந்தான்**. அவனுக்கு சின்னஞ்சிறிய உதடுகள் இருந்தன, **அவன் சிறிய நீல நிற மேலாடையைப் போன்றதை அணிந்திருந்தான்**. **அவனுடைய சிறிய சரீரமானது சுற்றிலும், சுற்றிலும், சுற்றிலும் திருகி முறுகிப் போயிருந்தது**. **அவனுடைய சிறிய கைகள் அவனது பக்கவாட்டின் மீதாக இழுக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு காலும் முறுகித் திருகியிருந்தது**, இங்கிருந்து பற்றிப்பிடித்து, அவனுடைய சரீரமானது இங்கு வரையில் திருகியிருக்கும்

ஏதோவொன்றைப் போன்று அது காணப்படும் அளவுக்கு அவனுடைய சரீரம் திருகியிருந்தது.

73. நான், "ஓ, இரக்கம். இது அவர்களில் ஒருவனாக இருக்க வேண்டும்... இது தரிசனமா என்று கூட எனக்குத் தெரியவில்லையே" என்று நினைத்தேன். அது அவ்வாறு இல்லை என்று கற்பிக்கப்பட்டிருந்தேன், (அப்படியாக) அது சம்பவித்தது, என்னால் அதிலிருந்து விலகியிருக்க முடியவில்லை. நான் அங்கேயிருந்து, அந்தச் சிறு பையனை நோக்கியபடி நின்று கொண்டிருந்தேன். நான், "ஓ, என்னே, அந்த பரிதாபமான சிறு பையன்" என்று நினைத்தேன்.

**தகப்பனார் சென்று அவனை எடுத்து, என்னிடம் கொண்டு வந்தார். அப்போது இதோ நின்று கொண்டிருக்கிற ஒரு சத்தத்தை நான் கேட்டேன். அதற்கு முன்பு, அந்தத் தூதனானவரை நான் ஒருபோதும் கண்டதில்லை. அதற்குப் பின்பும், பல வருடங்களாக நான் அதைக் கண்டதேயில்லை, ஆனால் நான் எப்போதுமே அந்த சத்தத்தைக் கேட்டிருக்கிறேன். அவர் இங்கே நின்றுகொண்டு, "இப்பொழுது, அந்தக்**

**குழந்தையின் மேல் உன் கரங்களை வை"** **என்றார்**. நான் என் கரங்களை அந்தக் குழந்தையின் மேல் வைத்த போது, அது அந்த மூலையில் குதித்து, அவனுடைய தகப்பனாரின் கைகளை விட்டுப் போனதைக் கண்டேன், அப்படியே ஒரு... ஒரு காலை ஊன்றியவுடன், அந்தக் கால் திருகி முறுக்கப்பட்ட நிலையில் இருந்து சரியானது (unwound). மற்ற காலை ஊன்றியவுடன் அதுவும் சரியானது (unwound). அதன்பிறகு அவனுடைய சரீரத்தின் மற்ற பாகங்களும் சரியாயின (unwound). பிறகு அவன் என்னை நோக்கி நடந்து வந்து, தன்னுடைய கரங்களை மேலே என்மேல் வைத்தான். அவன் ஒரு சிறிய... ஐக் கொண்டிருந்ததைப் போன்று காணப்பட்டது. அவனுடைய உதடுகளில் இவ்விதமாக மோர் அல்லது சாக்கலேட் பாலினாலான ஒரு சிறு மீசையைக் கொண்டிருப்பது போன்று காணப்பட்டது. அவன், **"சகோதரன் பிரன்ஹாமே, நான் பரிபூரணமாக சுகமடைந்து விட்டேன்"** என்றான்.

74. இப்படியிருக்க, நான்-நான் தரிசனத்தை விட்டு வெளியே வந்தேன், ஏனென்றால் அது அதிகாலை வேளையாயிருந்தது, அப்போது யாரோ ஒருவர் கதவைத் தட்டிக் கொண்டிருந்தார். [சகோதரன் பிரன்ஹாம் தட்டுகிறார் - ஆசிரியர்.] அது அவ்வாறு இருக்க, ஒரு மனிதன், "திருமதி. பிரன்ஹாம் அவர்களே, சகோதரன் பிரன்ஹாம் இங்கே இருக்கிறாரா?" என்று உரக்க கத்திக் கொண்டிருந்தார். நான்... அம்மாவால் தூக்கத்தை விட்டு விழித்தெழும்ப முடியவில்லை. நான் ஒருவிதமாக அதை விட்டு வெளியே வந்து, உங்களுக்குத் தெரியும். அங்கே உட்கார்ந்து கொண்டிருந்தேன், அப்போது அவர்கள், "பில்லி" என்று கூறுவதைக் கேட்டேன்.

75. நான், "ஆம்" என்றேன்.

அவர்கள், "யாரோ ஒருவர் கதவண்டை நிற்கிறார்" என்றார்கள். நான் கதவருகில் சென்று அதைத் திறந்தேன், அது திரு. எமில் அவர்களாக இருந்தது.

அவர், "ஹலோ, பில்லி" என்றார்.

நான், "ஹலோ ஜான், என்ன விஷயம். நான் உங்களை நீண்ட காலமாகப் பார்க்கவில்லை.

உள்ளே வாருங்கள்" என்றேன். அவர் உட்கார்ந்தார்; நான் என்னுடைய முகத்தை தேய்த்து துடைத்தவண்ணம் இருந்தேன், ஏனென்றால் அந்தக் காரியங்கள் சம்பவிக்கும் போது, என்னுடைய முகமானது மிகவும் மரத்துப் போய் விடுகிறது.

சில ஜனங்கள் அதைக் குறித்துக் கேட்கிறார்கள், இன்று எனக்கு ஒரு கடிதம் கிடைத்தது, அதில், "நீர் ஏன் எப்போதுமே உம்முடைய முகத்தைத் தேய்த்துக் கொண்டிருக்கிறீர்" என்று எழுதப்பட்டிருந்தது. அது மரத்துப் போய், மிகவும் இறுக்கமாக இருப்பதாக உணரச் செய்கிறது. நான்... எனவே நான்-நான் அங்கே உட்கார்ந்து என்னுடைய முகத்தைத் தேய்த்துக் கொண்டிருந்தேன். இது ஏறக்குறைய 16 வருடங்களுக்கு முன்பு நடந்தது என்று நினைக்கிறேன்.

எனவே, அவர், "நல்லது, இதோ பாருங்கள், பில்லி. நான் கூற விரும்புகிற முதலாவது காரியம் என்னவென்றால், நான் செய்த அந்தக் காரியத்திற்காக வருந்துகிறேன்" என்றார்.

76. நான், "திரு. எமில் அவர்களே, என்ன விஷயம்?" என்று கேட்டேன்.

அவர், “நீங்கள் அந்நாளில் அங்கே கீழே ஒரு தாழ்வான இடத்தில் மக்காச்சோளத்தை அறுவடை செய்து கொண்டிருந்த போது, நாம் அங்கே கீழே மீன்பிடித்துக் கொண்டு, நீர் எங்களிடம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைக் குறித்து பேசிக் கொண்டிருந்த போது, அந்த ஆற்றின் கரையில் இருந்தது உமக்கு நினைவிருக்கிறதா?” என்றார்.

நான், “ஆமாம்” என்றேன்.

“நீர் தளர்த்தியான மேலாடையை அணிந்து கொண்டு, என்னையும் என்னுடைய குடும்பத்தினரையும் வெளியே அந்த ஆற்றுக்கு அழைத்துச் சென்று, எங்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தீரே” என்றார்.

நான், “ஆமாம், நான் அனேக நேரங்களில் அந்தக் காரியங்களைச் செய்திருக்கிறேன்” என்றேன். விலங்குகள் வேட்டையாடப்படுவதைக் கண்காணிக்கும் அதிகாரியாக (game warden) நான் இருந்த போது, என்னுடைய சீருடையில் இருந்தவாறே தண்ணீரில் நடந்து சென்று, ஞானஸ்நானம் கொடுத்து விட்டு, மேலே வந்து, சற்று ஈரத்தை உலர விட்டு விட்டு, விரைந்து சென்று, என் காரில் ஏறி மறுபடியுமாக, ரோந்துக்கு

புறப்பட்டுச் சென்று விடுவேன். பாருங்கள், அது ஒரு காரியமில்லை... நீங்கள் அதிகமாக பகட்டாரவாரத்தையும், காரியத்தையும் கொண்டிருக்க வேண்டியதில்லை. **ஒரு விசுவாசி ஆயத்தமாக இருக்கும் போதே, அவனுக்கு ஞானஸ்நானம் கொடுத்து விடுங்கள்**. **ஞானஸ்நானம் கொடுக்க வேண்டிய நேரம் அதுவே**. எப்படியும் தேவனுக்கு எந்த சடங்கு முறை சம்பிரதாயமான காரியமும் கிடையாது. "விசுவாசித்தவன் ஞானஸ்நானம் பண்ணப்பட்டான்" என்று தான் அது இருக்கிறது.

77. அவர், "நல்லது, சகோதரன் பிரன்ஹாமே, அப்போது எனக்கு இரண்டு சிறு பிள்ளைகள் இருந்தார்கள், எனக்கு இரண்டு சிறிய மகன்கள் இருந்தார்கள்" என்றார்.

நான், "ஆமாம், எனக்கு நினைவிருக்கிறது" என்றேன். அது நான்கு, ஐந்து, ஆறு வருடங்களுக்கு முன்பு.

அவர், "நல்லது, நான் வருந்துகிறேன். நான் தவறான பாதையைத் தெரிந்து கொண்டேன். நான் இங்கே பொடி உற்பத்தி செய்யும் இந்த ஆலைகளில் (powder plants) ஒன்றில் வேலை செய்து கொண்டிருந்தேன். (அப்போது) நான் ஒரு

மனிதனைக் கொன்றேன். நான் ஒரு சுத்தியால் அவனை அடித்தேன்; நாங்கள் சண்டையிட்டோம். அவன் முதலில் என்னை அடித்தான், அவன் என்னை உதைத்து அங்கேயிருந்த ஒரு பெரிய கொப்பறைக்குள் எறியப் போவதாக இருந்தான், அங்கே கொதித்துக் கொண்டிருந்த அந்தக் cottons-களில் சில அவர்களுக்கிருந்தன, எப்போதுமே அது அவ்விதமாகவே இருந்தது. அவன் என்னை அடித்தவுடனே நான், ஒரு சுத்தியை (சம்மட்டியை) சட்டென எடுத்து, அதைக்கொண்டு அந்த மனிதனை அடிக்க, அது அவனைக் கொன்று போட்டது. நான்-நான் அதற்காக ஒரு வருடம் தண்டனை அனுபவித்தேன்" என்றார், ஆனால், "அது தற்காப்பிற்காக செய்யப்பட்ட கொலை என்ற காரணத்தினால் தான் அவ்விதம் ஆனது" என்றார்.

78. அவர், "நான் தேவனிடம் போவதற்குப் பதிலாக, வீட்டிற்கு வந்து, குடிக்கவும் தவறான காரியங்களைச் செய்யவும் தொடங்கினேன். என்னுடைய மூத்த மகனை இழந்து விட்டேன். சகோதரன் பிரன்ஹாமே, சற்றே ஒரு மணி நேரத்துக்கு முன்பு, இங்கே இந்தப் பட்டணத்தைச் சேர்ந்த மருத்துவராகிய டாக்டர் புருனர் இப்பொழுது தான் என்னுடைய வீட்டை விட்டுப்

புறப்பட்டுச் சென்றார். என்னுடைய மற்ற சிறிய மகன் நிம்மோனியாவினால் மரித்துக் கொண்டிருக்கிறான். பகல் வெளிச்சம் வரை அவனால் உயிரோடு இருக்க முடியாது என்று மருத்துவர் கூறுகிறார். நான் உம்மிடம் வந்து, நான் செய்ததற்காக நீர் என்னை மன்னிப்பீரா என்றும், நீர் வந்து எனது குழந்தைக்காக ஜெபிப்பீரா என்றும் உம்மிடம் கேட்டுப் பார்க்கலாம் என்று நினைத்தேன்" என்றார்.

"ஏன்," நான், "நிச்சயமாக, சகோதரனே" என்றேன். நான் சொன்னேன்...

79. அவர், "என்னுடைய மைத்துனரை (cousin) அழைத்து வரப் போய்க் கொண்டிருக்கிறேன்" என்றார், அதற்குப் பிறகு அவர் என்னுடைய கூட்டாளிகளில் ஒருவராக ஆனார், அவர் தான் கிரஹாம் ஸ்நெல்லிங். அவர், "அவர் ஒரு கிறிஸ்தவர்; நாம் எல்லாரும் போய் ஜெபிக்கலாம் என்று நினைத்தேன்" என்றார். அப்போது அம்மா உள்ளே வந்தார்கள்.

நான், "நான் ஆயத்தமாகி விடுகிறேன், நீர் திரும்பி வந்து என்னை அழைத்துச் செல்லும்" என்றேன். அம்மா ஆயத்தமானார்கள், அல்லது இன்னும் சரியாகச் சொன்னால், நானே

ஆயத்தமாகி வெளியே சென்றேன். அம்மா, “பில்லி, அங்கே உள்ளே என்ன விஷயம்?” என்று கேட்டார்கள்.

நான், “அம்மா, அது ஒரு தரிசனம். இந்த மனிதருக்கு ஒரு சிறிய மகன் இருக்கிறான், அவன் சுகமடையப் போகிறான் என்று நான் விசுவாசிக்கிறேன்” என்றேன். அவர்களுக்கு அவரைத் தெரியவில்லை. நான், “நல்லது, அவன் இந்தக் காலையில் சுகமடையப் போகிறான் என்று நான் விசுவாசிக்கிறேன்” என்றேன்.

அவர்கள், “நீ போகிறாயா... நீ இப்பொழுது போகவில்லையா?” என்றார்கள்.

நான், “ஆமாம், நான் இப்பொழுது புறப்பட்டுப் போகிறேன். அவர் எனக்குப் பின்னால் திரும்பி வருகிறார்” என்றேன். சற்று நேரத்தில், அவர் என்னை அழைத்துச் சென்றார். நாங்கள் சாலையில் போகத் தொடங்கினோம், அப்போது அவர் சொன்னார்... அங்கே பாய்ந்து கொண்டிருக்கும் நதியின் பக்கவாட்டு பகுதியின் மேலிருக்கும் அந்தப் பழைய கப்பல் கட்டும் இடத்தின் பக்கமாக தொடர்ந்து பிரயாணம் செய்து மேலே போய்க் கொண்டிருந்தோம்.

80. நான், “திரு. எமில் அவர்களே, நீங்கள்… நீங்கள் எங்கே வசிக்கிறீர்கள்?” என்று கேட்டேன்.

அவர், “நான் ஊடிகாவுக்கு மேலாக, மேலே அந்த நாட்டில் வசிக்கிறேன்” என்றார்.

நான், “நான் அனேக வருடங்களாக உம்மைக் குறித்துக் கேள்விப்பட்டிருக்கவில்லை. கொஞ்சம் நீளமான ஒரு shotgun வீட்டைப் போன்ற, அதுபோன்ற ஒரு வீட்டில் நீர் வசிக்கவில்லையா?” என்றேன்.

அவர், “ஆம்” என்றார்.

நான், “நீர் இவ்விதமான ஒரு சிறு வாசல் வழியாக மேலே வந்து, கொஞ்சம் பெரிய கற்களுக்கு மேலே சென்று, மேலே போனீர், அங்கே ஏதோவொரு பெரிய அத்தி இன மரங்கள் (sycamore) நின்று கொண்டிருக்கின்றது” என்றேன்.

அவர், “ஆமாம்” என்றார்.

நான், “நீர் வைத்திருக்கிறீர் - நீர் சுவர்களில் சிவப்பு நிற காகிதத்தை வைத்திருக்கிறீர்” என்றேன்.

அவர், “அது உண்மை” என்றார்.

நான், “நீர் உள்ளே போகும் போது, உம்முடைய சிறிய மகன், வாசலின் வலது

பக்கத்தில் இருக்கிற ஒரு படுக்கையில், சிறிய, இரும்பினாலான poster bed-ல் படுத்துக் கொண்டிருக்கிறான்" என்றேன்.

அவர், "நீர் எப்பொழுதாவது அங்கே இருந்தீரா?" என்று கேட்டார்.

81. நான், "ஆம், ஐயா" என்றேன்.

அவர், "நல்லது, பில்லி, நீர் எப்போது அங்கே இருந்தீர், நான் ஏறக்குறைய இரண்டு வாரங்களாக மட்டுமே அங்கே வசித்து வருகிறேன். நாங்கள் ஓஹியோவிலிருந்து வந்திருக்கிறோம்" என்றார்.

நான், "நான் ஏறக்குறைய ஒன்றரை மணி நேரத்துக்கு முன்பு தான் அங்கே இருந்தேன்" என்றேன்.

அவர், "ஏன், பில்லி, எனக்கு-எனக்கு-எனக்கு புரியவில்லையே" என்றார்.

நான், "உங்களுடைய சிறிய மகன் ஒருவித நீல நிற தடித்த இழைகள் கொண்ட பருத்தி துணியினாலான ஒரு ஜோடி தளர்த்தியான மேலாடைகளை அணிந்திருக்கவில்லையா?" என்று கேட்டேன்.

அவர், “அவன் இப்பொழுது அவைகளைத் தான் அணிந்திருக்கிறான்” என்றார்.

“அவ்வாறு தான் நானும் நினைத்தேன்” என்றேன். நான், “உம்முடைய மனைவி ஒருவிதமாக கருமை நிற தலைமுடியைக் கொண்ட ஒருவித ஒல்லியான பெண் அல்லவா?” என்றேன்.

அவர், “ஆம்” என்றார்.

“நீங்கள் ஒன்(றரை)… மணி நேரத்துக்கு (முன்பு) எப்போது என் வீட்டில் இருந்தீர்கள்?” என்று கேட்டார்.

நான், “ஆமாம், திரு. எமில் அவர்களே, நான் ஒரு மணி நேரத்துக்கு முன்பு அல்லது ஒன்றரை மணி நேரத்துக்கு முன்பு தரிசனத்தில் உம்முடைய வீட்டில் இருந்தேன், அல்லது ஏதோவொரு வித ஆவி என்னை அங்கே எடுத்துச் சென்றது. கர்த்தர் உம்முடைய குழந்தையை சுகப்படுத்தப் போகிறார்” என்றேன். உடனே அவர் அந்தப் பழைய மாடல் A ஃபோர்டு காரை பிரேக் போட்டு நிறுத்தி விட்டு, தம்முடைய காரை திருப்பும் சக்கரத்தின் மேல் விழுந்து தமது கரங்களை மேலே உயர்த்தி, “தேவனே, என்மேல் இருக்கமாயிரும். நான் உம்மை சேவிப்பேன், தேவனே” என்று அலறிக்

கூச்சலிட்டார். அங்கே நான் என்னுடைய கரங்களை அவரைச் சுற்றிலும் போட்டுக் கொண்டு, அவரை மறுபடியும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவிடம் வழிநடத்தினேன்.

82. இரண்டு அல்லது மூன்று வருடங்களுக்கு முன்பு, நான் ஃபுளோரிடாவில் இருந்தேன். அப்போது யாரோ ஒருவர், "பில்லி..." என்று உரக்க கத்துவதைக் கேட்டேன். நான் சுற்றும் முற்றும் பார்த்தேன். அது... ஆக இருந்தது. நான் எப்போதுமே அவரை... என்று அழைத்தேன். நாங்கள் சற்று, அல்லது ஒன்றாக வேலை செய்தோம், அப்போது நாங்கள் அவரை, "ஐயா, ஜான் அவர்களே" என்று அழைப்போம்.

நான் சொன்னேன்... [ஒலிநாடாவில் காலியிடம் - ஆசிரியர்]... அங்கே அஞ்சல் அலுவலகத்துக்கு அருகிலுள்ள தெரு பக்கமாக போன போது, பிரேக் போட்டு காரை நிறுத்தினேன் (pull in). அவர் இப்பொழுது அங்கே தான் வசித்து வருகிறார்.

எனவே நாங்கள் மேலே அந்த வீட்டிற்குச் சென்றோம்... இப்பொழுது, அது எவ்வளவு பரிபூரணமாயிருக்கிறது என்பதை நான் உங்களுக்குக் காண்பிக்கிறேன்.

இப்பொழுது, அந்தக் குழந்தையை எனது கரங்களில் தருவதற்கு முன்பாக, அந்தச் சிறு தாயார் இவ்விதமாக அந்தச் சுவரின் மேல் சாய்ந்து கொண்டிருக்கிற ஒரு காட்சியை நான் அந்தத் தரிசனத்தில் கண்டேன். மேலும் ஒரு வயதான சீமாட்டி... இப்பொழுது, அங்கே அந்த அறையில் ஒரு சிவப்பு நிற duofold சூட்டை அணிந்தவரும் கூட உட்கார்ந்து கொண்டிருந்தார். அந்த வாசலிலிருந்து, அந்த வழியாக ஒரு வயதான சீமாட்டி உள்ளே வந்து, தங்களுடைய மூக்கு கண்ணாடியைத் துடைத்துக் கொண்டே இந்தப் பக்கத்திலிருந்த இந்த நாற்காலியில் அமருகிறார்கள். மேலும் இதோ duofold ஆடையை அணிந்து கொண்டிருக்கிற ஒரு வாலிபர், இளம் பொன்னிற மலைமயிரை உடைய வாலிப மனிதர் உட்கார்ந்து கொண்டிருந்தார், அவர்கள் ஜன்னலுக்கு வெளியே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

83. எனவே நான் உள்ளே நடந்து சென்ற போது... நிச்சயமாகவே அப்போது அதைக் குறித்து தெரியாதிருந்தது, எப்படி அதைச் செய்வது என்றோ, அல்லது அது என்னவென்றும், எனக்குத் தெரியாது, ஏனென்றால் அது என்னவென்று நான் அறியாதிருந்தேன். இவ்வாறாக அந்த அறைக்குள்

நான் நடந்து சென்றேன்; நான் அங்கே உள்ளே போகையில், நான் உற்றுப் பார்த்தேன், அங்கே அந்தச் சிறு பையன் படுத்த படுக்கையாய் கிடந்தான், மேலும் இங்கே இந்தக் காரியத்தை அவனுடைய மூக்கின் மேல் வைத்திருக்க, உங்களுக்குத் தெரியும், ஒரு தாயார் முயற்சித்துக் கொண்டும், அழுது கொண்டும், அவ்வாறு செய்த வண்ணம் இருந்தாள். அவன் பிழைப்பதே கஷ்டமாயிருந்தது.

அந்தத் தரிசனம் எப்படி இருந்ததோ அப்படியே அதைக் கண்டேன். நிம்மோனியா அவனை முழுவதுமாக மூச்சுத் திணறச் செய்திருந்தது, ஆனால் இதோ அவன் (இவ்வாறு தான்) (சுவாசித்துக்) கொண்டிருந்தான் [சகோதரன் பிரன்ஹாம் அந்தச் சத்தத்தை விளக்கிக் காண்பிக்கிறார் - ஆசிரியர்.] அவன் சின்னஞ்சிறிய பையனாக இருந்தான்... பழுப்பு நிற தலைமயிரை உடைய, வெறுமனே ஒரு சிறு பையனாக இருந்த அவனை நான் கண்டேன். நான், "திரு. எமில் அவர்களே, அவனை இங்கே கொண்டு வாரும், தேவனுடைய மகிமையை நீர் காண்பீர்" என்றேன்.

84. எனவே அந்தச் சிறு பையனை - (அந்த) மனிதர் அச்சிறு பையனை தம்முடைய கைகளால்

தூக்கி, உணர்ச்சிவசப்பட்டவராய், ஒடோடி அவனை என்னிடம் கொண்டு வந்தார். நான் அங்கே எப்படி போனேன் என்பதைக் கவனியுங்கள். பாருங்கள்? நான் அருளப்பட்ட அணுகுமுறையில் வரவில்லை. புரிகிறதா? நான், "அவனை இங்கே கொண்டு வாரும்" என்றேன். நான் சுயநினைவைப் பெற்றேன், ஏனென்றால் அவனைச் சுகமடையச் செய்யப் போகிறதான தரிசனத்தை நான் கண்டிருந்தேன். ஆனால் நீங்கள் தேவனுடைய அணுகுமுறையில் வந்தாக வேண்டும். புரிகிறதா? அவர்கள் அவனை அங்கே கொண்டு வந்தனர். நான் அப்படியே என் கரங்களை அவன் மேல் வைத்து, "தேவனே, நீர் இந்தச் சிறு பையனை சுகப்படுத்த வேண்டும் என்று நான் ஜெபிக்கிறேன். நீர் அதைச் செய்வதாகக் கூறினீரே" என்றேன். அந்தச் சிறு பையனோ மூன்று நான்கு தடவைகள் மூச்சுத் திணறி விட்டு முற்றிலும் சுயநினைவை இழந்து போனான்.

நான் அவனை உற்றுப் பார்த்தேன். அவனுடைய தாயார், "ஓ, அவன் மரித்து விட்டான், அவன் செத்துப் போய் விட்டானே, அவன் மரித்துப் போய் விட்டானே" என்று அலறிக் கூச்சலிடத் தொடங்கினாள்.

நான், "நல்லது, என்ன ஆனது? ஓ, என்னே, அதோ அது இருக்கிறது. ஓ, இதோ கிரஹாம் ஸ்நெல்லிங் இங்கே நின்று கொண்டிருக்கிறார்; இளம் பொன்னிற சுருள் முடியை உடையவராய் அங்கே உட்கார்ந்து கொண்டிருந்தவர் நிச்சயமாக அவராகத்தான் இருக்க வேண்டும். ஆனால் இங்கே இந்த நாற்காலியில் ஒரு வயதான பெண்மணி கட்டாயம் உட்கார்ந்திருக்க வேண்டுமே" என்று நினைத்தேன். அங்கே மரச்சாமான்களும் மற்றும் ஒவ்வொன்றுமே இருந்தன, ஆனால் அது சரியாக இல்லாதிருந்தது. நான் சரியான அணுகுமுறையில் வந்திருக்கவில்லை.

85. நிச்சயமாக அந்தப் பெண் தன்னுடைய கணவனின் பக்கத்தில் நின்று கொண்டிருக்கவில்லை. அவள் நிச்சயமாக அந்தக் கதவில் சாய்ந்து கொண்டிருக்க வேண்டியிருந்தது. நான், "ஓ தேவனே, நான் இந்தக் குழந்தையைக் கொன்று விட்டேன். நான்... ஓ, என்னே" என்று நினைத்தேன்.

தகப்பனார் குழந்தையை கீழே கிடத்தினார், அவள் அலறிக் கூச்சலிடத் தொடங்கி, அழுது கதறிக் கொண்டும், ஒவ்வொன்றையும் செய்து கொண்டும் இருந்தாள். நான் அப்படியே அங்கு

நின்று கொண்டிருந்தேன். நான், "ஓ, என்னே. நான் என்ன செய்து விட்டேன்? என்ன செய்திருக்கிறேன்?" என்று நினைத்தேன். நான் அப்படியே சற்று நேரம் காத்திருந்தேன், ஓ, அந்த குழந்தை பிழைப்பதே கஷ்டமாயிருந்தது, இப்பொழுதோ அது இன்னும் மோசமாகி விட்டது.

நான், "ஓ, நான் அந்தக் குழந்தையைக் கொன்று போட்டிருப்பேன் என்றால், ஓ, ஆனால் நானாகவே அதைக் கொன்று போடவில்லை, ஆனால் அதற்கு காரணம் இருந்தது, நான் செய்யும்படி **அவர்** என்னிடம் சொன்னவைகளுக்கு நான் கீழ்ப்படிந்திருந்தால், ஆனால் நானோ அதை விட்டு விட்டேன்... அது உண்மை, மக்களே. இதோ இந்த வேதாகமத்திற்கு முன்பாக, அது சத்தியம் என்று பரலோகத்திலிருக்கிற தேவன் அறிவார்.

86. மேலும் நான் நினைத்தேன்... நல்லது இப்பொழுது, நான் நடந்து சென்று அங்கே உட்கார்ந்து கொண்டேன். அப்போது பகல் வெளிச்சம் வந்து விட்டது, நான் ஏறக்குறைய ஒரு மணி நேரமாக அங்கேயே உட்கார்ந்து கொண்டிருந்தேன். பகல் வெளிச்சம் வர, திரு. ஸ்நெல்லிங் அவர்கள், "நல்லது, நான் வேலைக்குப்

போக வேண்டும்” என்று சொன்னார், அவர், “நான்...” என்றார்.

நான், “ஓ, என்னே. அவர்கள் அவரை அழைத்துச் சென்று விட்டால், அந்த ஒருவகை (சூட்டை) (duofold) அணிந்திருந்த இளம்பொன்னிற தலைமயிர் உடைய மனிதர் உட்கார்ந்து கொண்டிருந்தாரே... அவர் போய் விட்டால், தரிசனம் முழுவதும் பாழ்பட்டுப் போகுமே, நான்-நான் முழு காட்சியையும் கெடுத்துப் போட்டேனே” என்று நினைத்தேன். நான் அங்கே உட்கார்ந்து கொண்டிருந்தேன், ஓ, நான் - என்னுடைய இருதயம் அப்படியே எனக்குள்ளே இரத்தம் வடிந்து கொண்டிருந்தது. அவர்கள் எதையோ என்னிடம் கூற, நான் அதற்கு பதில் பேசக் கூட இல்லை. நான் அப்படியே அங்கே உட்கார்ந்து கொண்டிருந்தேன். என்னால் அவர்களிடம் பேச முடியவில்லை, ஏனென்றால் தேவன் ஒருக்கால் ஏதாவது ஒரு வழியில் அதைச் சரிப்படுத்தி, அந்தக்காட்சியை மறுபடியுமாக சரியாக்கி விடுவார் என்று நினைத்தேன். எனவே நான் அப்படியே அங்கேயே உட்கார்ந்து கொண்டு, அப்படியே-அப்படியே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

அவர்கள், "சகோதரன் பிரன்ஹாமே, நீர் மறுபடியும் குழந்தைக்காக ஜெபிக்க விரும்புகிறீரா?" என்று கேட்டனர்.

நான், "நன்றி" என்று கூறி விட்டு, உட்கார்ந்து கொண்டிருந்தேன்... நான், "ஓ, அந்த வயதான பெண்மணி எங்கே, ஓ..." என்று நினைத்தேன். இப்பொழுது... சகோதரன் கிரஹாம் போய் தம்முடைய கோட்டை அணிந்து கொண்டார்.

ஜான், "சகோதரன் பிரன்ஹாமே, நீர் எங்களோடு ஜெபர்ஸன்வில்லுக்கு திரும்ப வர விரும்புகிறீரா?" என்று கேட்டார்.

நான், "இல்லை, நன்றி" என்றேன். நான் அங்கேயே தங்கியிருக்க வேண்டியிருந்தது. நான், "அது சென்ற இரவில் சம்பவித்திருக்கும், (ஆனால்) அந்த குழந்தையால் குணமடைய முடியவில்லை, அதனால் வேறொரு நேரத்தை எவ்வாறு ஏற்படுத்த முடியும் என்பது எனக்குப் புரியவில்லை" என்று நினைத்தேன். பகல் வெளிச்சம் வந்து கொண்டிருந்தும், அது அங்கே அந்த நிலையிலேயே இருந்தது. வழக்கமாக ஏறக்குறைய சூரியன் உதிக்கும் நேரத்தில், வியாதிப்பட்டுள்ள ஜனங்கள் எப்படியிருப்பார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். நான், "ஓ, இதோ அது

இருக்கிறது, என்னே, நான் என்ன செய்து விட்டேன்” என்று நினைத்தேன்.

87. முதலாவது காரியம் என்னவென்றால்... திரு. ஸ்நெல்லிங் தம்முடைய கோட்டை அணிந்து கொண்டு, வெளியே போகத் துவங்கினார். திரு. எமில் தம்முடைய மனைவியிடம், “நல்லது, போய் வருகிறேன், தேனே. நான் கிரஹாமை அழைத்துச் சென்று விட்ட உடன் திரும்பி வந்து விடுகிறேன், அப்பொழுது தான் அவரால் வேலைக்குப் போக முடியும்” என்றார். மேலும் கூறினார்... அவரும் அந்த ஆலைகளில் ஒன்றில் வேலை செய்து கொண்டிருந்தார்.

அவர், “நான்-நான் சற்று நேரத்தில் திரும்பி வந்து விடுகிறேன், நான் இன்று காலையில் வேலைக்குப் போகவில்லை” என்றார்.

அவள், “சரி, அன்பே” என்றாள்.

நான் அங்கேயே உட்கார்ந்து கொண்டிருந்தேன்; நான், “ஓ...” என்று நினைத்தேன். அப்போது, நான் அந்த ஜன்னல் வழியாக வெளியே பார்க்க நேர்ந்தது, இதோ அந்தக் குழந்தையின் பாட்டி வந்து கொண்டிருந்தார்கள், தோள்பட்டை உடைய ஒரு சிறிய பை ஒன்றை தங்கள் கையில் பிடித்தபடி நடந்து வந்து

கொண்டிருந்தார்கள், அவர்கள் ஒரு ஜோடி மூக்கு கண்ணாடியையும் கூட அணிந்திருந்தார்கள், அவர்களுடைய முடி நரைத்திருந்தது, அவர்கள் சுற்றி நடந்து சென்று, பின்பக்கத்திற்குள் போய் விட்டார்கள். இப்பொழுது, அவர்கள் எப்போதுமே முன்பக்க வாசல் வழியாகத்தான் வருவார்கள் என்று அவர்கள் முன்பு ஒவ்வொரு முறையும் சாட்சி கூறினார்கள். ஆனால் அவர்கள் உள்ளே வரும்படியாக பின்பக்கம் இருக்கும் சிறு சமையலறைக்கு சென்றார்கள்.

88. நான், "ஓ, அது அவர்கள் தான்; அதுதான் அந்த பெண்மணி" என்று நினைத்தேன். அது அந்தப் பிள்ளையின் பாட்டி என்று அப்போது எனக்குத் தெரியாது, ஆனால் அந்தத் தரிசனத்தில் இருந்த பெண்மணி அவர்கள் தான் என்று நான் அறிந்திருந்தேன். எனவே இதோ அவர்கள் சரியாக... நடந்து வந்து கொண்டிருந்தார்கள். நான், "இதோ அது. இதோ அது இருக்கிறது. தேவனுடைய கிருபை அதை ஜெயங்கொள்ளப் போகிறது" என்று நினைத்தேன். நான் என்னுடைய இருதயத்தில் அவ்வாறு நினைத்தேன், அது உங்களுக்குத் தெரியும், நான் அங்கே நின்று அந்த வயதான பெண்மணியைக் கவனித்துக் கொண்டிருந்தேன்.

அவர்கள் சுற்றி வந்து, பின்பக்க வாசல் வழியாக உள்ளே போனார்கள். அவர்கள் கதவைத் திறந்த போது, நான், “அது யார்?” என்று கேட்டேன். சகோதரன் கிரஹாம் வாசலண்டையில் நின்று கொண்டிருந்தார், அவரும் திரு. எமில் அவர்களும் வெளியே போகப் போவதாயிருந்தனர்.

89. இந்நிலையில் அந்தத் தாயார் சமையலறையை காணும்படியாக சமையலறையின் வாசலை நோக்கிப் போனார்கள், மேலும் அந்த வயதான... வாலிப ஸ்திரீயாயிருந்த அந்தக் குழந்தையின் தாயார், அங்கே வெளியே நோக்கிப் பார்த்து, இங்கே - “ஓ, இது அம்மா” என்றாள். ஜானும் கிரஹாமும் திரும்பிப் பார்த்தனர். அவர்கள் அவ்வாறு செய்த போது, நான் உட்கார்ந்து கொண்டிருந்த இடத்தை விட்டு எழுந்தேன், ஏனென்றால் கிரஹாம் கட்டாயம் அங்கே உட்கார்ந்து இருந்தாக வேண்டும்.

எனவே நான்-நான் எழும்பி, திரும்பிப் பார்த்தேன், அப்போது அந்த தாயார் வந்தார்கள். அவர்கள் (அந்தக் குழந்தையின் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டு), அவர்கள், “குழந்தைக்கு

இன்னும் உயிர் இருக்கிறதா? அவன் சுகமடைந்து விட்டானா?" என்று கேட்டார்கள்.

90. மனைவி, "இல்லை, அம்மா, அது ஏறக்குறைய மரித்து விட்டது" என்று கூறி விட்டு, அவள் தன்னுடைய கரங்களை சுவற்றின் மேல் வைத்துக்கொண்டு, இவ்விதமாக அழத் தொடங்கினாள், உங்களுக்குத் தெரியும், அப்படியே கதவில் அவ்விதமாக அடித்துக்கொண்டு, சத்தமாய் அழுது கொண்டே, தன்னுடைய தாயாரை முத்தமிட்டாள்.

அப்போது அந்த வயதான பெண்மணி... நான், "நீங்கள் எங்கே போகிறீர்கள்?" என்று நினைத்தேன். அவர்களைக் கவனித்த போது, அவர்கள் போய், அந்த நாற்காலியில் உட்கார்ந்து, அந்த மூக்கு கண்ணாடியை எடுத்தார்கள், ஏனென்றால் அவர்கள் குளிர்ந்த சீதோஷ்ண நிலையிலிருந்து வந்திருந்தார்கள்... அந்தக் கண்ணாடியின் வெளிப்புறம் குளிரின் காரணமாக உறைபனி போன்று மங்கியிருந்தது (frosted), அவர்கள் தங்கள் மூக்கு கண்ணாடியைத் துடைத்துக் கொண்டிருந்தார்கள், நான், "பரிபூரணமாய் உள்ளது. சகோதரன் கிரஹாம் அப்படியே சென்று அதன் மேல்

உட்காருவாரானால்" என்று நினைத்தேன். சகோதரன் கிரகாம் அவர்களுக்கு உறவினராக இருந்தார், அந்த வாலிப பெண் அழுது கொண்டிருந்த காரணத்தினால், அவரும் அழத் தொடங்கினார், அப்போது அவர் போய் அதே இடத்தில் உட்கார்ந்து கொண்டார். ஓ, என்னே.

91. இப்பொழுது, அது சரியாக இருக்கிறது. நான் அங்கே நின்று கொண்டு, "திரு. எமில் அவர்களே, நீர் என்னை மன்னிப்பீரா?" என்று கேட்டேன்.

அவர், "ஏன்?" என்று கேட்டார்.

நான், "உமக்கு இன்னும் நம்பிக்கை உள்ளதா?" என்று கேட்டேன்.

அவர், "ஆமாம், பில்லி, ஏன்?" என்றார்.

நான், "நான் சற்று முன்பு, ஒழுங்குக்கு அப்பாற்பட்டு பேசி விட்டேன். நான் வருந்துகிறேன், நான் தேவனுக்கு முன்பாக மனஸ்தாபப்படுகிறேன். ஆகையால் தான் நான் இந்த இரண்டு மணி அல்லது அதற்கும் அதிக நேரமாக ஒன்றும் பேசவில்லை. நான் தரிசனத்திற்காக காத்திருக்கவில்லை. சகோதரன்

கிரஹாம் எழுந்து விட்டார், அல்லது... எனக்கு வெளிப்பட்டது என்னவென்றால்” என்றேன்.

அவர், “நல்லது, என்ன, என்ன சொல்லுகிறீர்?” என்றார்.

நான், “எல்லாம் ஒழுங்கில் உள்ளது. உமக்கு இன்னும் என்மேல் நம்பிக்கை இருக்குமானால், இப்பொழுது அந்தக் குழந்தையை இங்கே கொண்டு வாரும்” என்றேன்.

அந்த தகப்பன் குழந்தையைத் தூக்கிக் கொண்டு, அங்கே நடந்து வந்தார். நான், “பரலோகப் பிதாவே, என்னுடைய முட்டாள்தனத்தையும், என்னுடைய தவற்றையும் எனக்கு மன்னித்தருளும். இப்பொழுது, நீர் செய்வீரென்று நீர் சொன்னதை நிறைவேற்றும்” என்றேன்.

பின்பு, என்னுடைய கரங்களை அந்தக் குழந்தையின் மேல் வைத்தேன். **உடனே, அது தன்னுடைய கரங்களை தனது அப்பாவுடைய கழுத்தைச் சுற்றிலும் போட்டுக் கொண்டு, “அப்பா, அப்பா, அப்பா” என்றது.**

92. எல்லாரும் சத்தமாக கூச்சலிடத் தொடங்கினர். அங்கே மேலே அந்த

மலைப்பாகத்தில் இரட்சணிய சேனை சபையார் அவர்களிடம் வந்திருப்பார்கள் என்று அவர்கள் நினைத்தனர். அதன்பிறகு அந்தச் சிறு குழந்தை... ஒரு சில நிமிடங்களுக்குப் பிறகு-பிறகு, நான், “இப்பொழுது, நாம் போகலாம்” என்று கூறினேன்.

அவர், “சகோதரன் பில் அவர்களே, என்னுடைய குழந்தை சுகமாகி விட்டதா?” என்று கேட்டார்.

நான், “எனக்குக் காண்பிக்கப்பட்டபடி, குழந்தை அந்த மூலையை விட்டு வெளியே வந்து, அது மூன்று முறை சுழன்றது, ஒருமுறை இந்தக் காலைக் கொண்டு இந்தவிதமாக சுழன்று திரும்பியது. ஒரு முறை இந்தக் காலின் மேல் திரும்ப இந்த விதமாகவும் சுழன்று திரும்பியது, அதன்பிறகு அதனுடைய சரீரம் நேரானது,” என்றேன், மூன்று கட்டங்களாக இருந்தது மூன்று நாட்களைக் குறிக்கிறது. நான், “எனக்குச் சொல்லப்பட்டபடியே, மூன்று நாட்களில், இந்தக் குழந்தை குணமடைந்து சுகமாகி விடும்” என்றேன்.

93. எனவே அவர்கள் அவனை மறுபடியும் படுக்கையில் படுக்க வைத்தனர், அவனோ தன்னுடைய அப்பாவிடம் பேசிக் கொண்டிருந்தான், அதற்கு முன்பு அவனுக்கு மூச்சு

விடுவது கூட கஷ்டமாயிருந்தது. நாங்கள் சென்று காரில் ஏறி, வீட்டுக்குச் சென்றோம். புதன்கிழமை இரவில் நான் அதைச் சபையில் கூறினேன். **நான், "நாளை மறுநாள் அல்லது நாளை இரவில் எத்தனை பேர் மேலே வந்து, நான் அந்தக் கதவண்டை போகும்போது கவனித்து, அந்தச் சிறு குழந்தை... ஆகிறதா என்று பார்க்க விரும்புகிறீர்கள் என்று கேட்டேன். இப்பொழுது மேலேயுள்ள அந்த வீட்டாருக்கு அதைக் குறித்து எதுவும் தெரியாதிருந்தது; அந்தச் சிறு குழந்தை என்னிடம் வந்து, அதனுடைய கரங்களை என்மேல் வைத்து, 'சகோதரன் பில், நான் பூரணமாய் சுகமடைந்து விட்டேன்' என்று கூறாமல் இருக்கிறதா என்றும், அப்போது அதனுடைய வாயின் மேல் பால் இருக்கிறதா என்றும் பாருங்கள்" என்றேன்.** நான், "அது அவ்வாறு செய்யாமல் போகிறதா என்று பாருங்கள்" என்றேன். புரிகிறதா? ஒரு டிரக் (திறந்த சரக்கு வண்டி - தமிழாக்கியோன்) நிறைய பேர் அங்கே மேலே சென்றோம்.

94. அவர்கள் அந்த ஜன்னல்களைச் சுற்றிலும் கூட்டமாகக் கூடியிருந்தனர். பிறகு நான் டிரக்கை விட்டு இறங்கி, அங்கு சென்று, கதவைத் தட்டினேன், அவர்கள் வெறுமனே ஏழை ஜனங்களாக இருந்தனர், அவர்களுக்கு தரைவிரிப்பும் இல்லாதிருந்தது...?... நான் அதைத் தாண்டிச் செல்லத் தொடங்கினேன், அந்தப் பிள்ளைகள் - அந்தப் பிள்ளை பக்கத்து வீட்டிலிருந்து காணும்படி மேலே வந்திருந்த வேறொரு சிறு பெண் பிள்ளையோடு தரையில் விளையாடிக் கொண்டிருந்தது. நான் கதவைத் தட்டின போது, இப்பொழுது என்னுடைய மனைவியாயிருக்கிற மேடா... நாங்கள் அப்பொழுது விவாகம் பண்ணியிருக்கவில்லை. அவள் எனக்கு அருகில் நின்று கொண்டிருந்தாள், மூன்று அல்லது நான்கு பேர் எனக்கு அருகாமையில் நின்று கொண்டிருந்தனர்.

அப்போது திருமதி. எமில், "ஓ, இது சகோதரன் பில் அவர்கள். உள்ளே வாருங்கள், சகோதரன் பில். நான் உமக்கு ஒரு காரியத்தைக் காண்பிக்க விரும்புகிறேன்" என்றாள்.

95. நான் இவ்விதமாக அவர்களை நோக்கிப் பார்த்தேன். நாங்கள் அந்த அறைக்குள் நடந்து சென்றோம். நாங்கள் அங்கே நின்று கொண்டிருந்த

போது, விளையாடுவதற்கான கட்டித் துண்டுகளில் (blocks) சிலவற்றை அந்த மூலையில் வைத்து விளையாடிக் கொண்டிருந்த அந்தச் சிறு பையன் எழுந்து என்னை நோக்கிப் பார்த்தான், **அவன் பால் குடித்திருந்த காரணத்தினால், அவனுடைய வாயின் குறுக்கே சின்னதாக மீசை இருந்தது, அவன் நடந்து வந்து, என்னுடைய கரத்தைப் பற்றிக் கொண்டு,** "**சகோதரன் பில், நான் இப்பொழுது பூரணமாக சுகமடைந்து விட்டேன்**" **என்றான்.** அது என்ன? அவன் மூன்று நாட்களாக, எல் ஷடாயின் மேல், தேவனுடைய தெய்வீக வாக்குத்தத்தத்தின் மேல் பால் அருந்திக் கொண்டிருந்தான், தேவனுடைய தெய்வீக அணுகுமுறைக்கு வருதல். அவனுக்கு ஒரு அணுகுமுறை இருந்தது. நீங்கள் அதை விசுவாசிக்கிறீர்களா? நாம் ஜெபிப்போம்.

★★★★★

# தீர்க்கதரிசனம் 3

## திருடுபோன கார் ஒரு தரிசனத்தின் மூலம் திரும்பக் கிடைத்தல்



**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

I சாமுவேல் 9:3-10

3. சவுலின் தகப்பனாகிய கீசுடைய கழுதைகள் காணாமற்போயிற்று; ஆகையால் கீஸ் தன் குமாரனாகிய சவுலை நோக்கி: நீ வேலைக்காரரில் ஒருவனைக் கூட்டிக்கொண்டு, கழுதைகளைத் தேட, புறப்பட்டுப்போ என்றான்.

4. அப்படியே அவன் எப்பிராயீம் மலைகளையும் சலீஷா நாட்டையும் கடந்துபோனான்; அங்கே அவைகளைக் காணாமல் சாலீம் நாட்டைக் கடந்தார்கள். அங்கேயும் காணவில்லை; பென்யமீன் நாட்டை உருவக்கடந்தும் அவைகளைக் காணவில்லை.

5. அவர்கள் சூப் என்னும் நாட்டிற்கு வந்தபோது, சவுல் தன்னோடிருந்த வேலைக்காரனை நோக்கி: என் தகப்பன், கழுதைகளின் மேலுள்ள கவலையை விட்டு, நமக்காகக் கவலைப்படாதபடிக்குத் திரும்பிப்போவோம் வா என்றான்.

6. அதற்கு அவன்: இதோ, இந்தப் பட்டணத்திலே தேவனுடைய மனுஷன் ஒருவர் இருக்கிறார்; அவர் பெரியவர்; அவர் சொல்லுகிறதெல்லாம் தப்பாமல் நடக்கும்; அங்கே போவோம்; ஒரு வேளை அவர் நாம் போகவேண்டிய நம்முடைய வழியை நமக்குத் தெரிவிப்பார் என்றான்.

7. அப்பொழுது சவுல் தன் வேலைக்காரனைப் பார்த்து: நாம் போனாலும் அந்த மனுஷனுக்கு என்னத்தைக் கொண்டுபோவோம்; நம்முடைய பைகளில் இருந்த தின்பண்டங்கள் செலவழிந்துபோயிற்று; தேவனுடைய மனுஷனாகிய அவருக்குக் கொண்டு போகத்தக்க காணிக்கை நம்மிடத்தில் ஒன்றும் இல்லையே என்றான்.

8. அந்த வேலைக்காரன் பின்னும் சவுலைப் பார்த்து: இதோ, என் கையில் இன்னும் கால்சேக்கல் வெள்ளியிருக்கிறது; தேவனுடைய மனுஷன் நமக்கு நம்முடைய வழியை அறிவிக்கும்படிக்கு, அதை அவருக்குக் கொடுப்பேன் என்றான்.

9. முற்காலத்தில் இஸ்ரவேலில் யாதொருவர் தேவனிடத்தில் விசாரிக்கப்போனால், ஞானதிஷ்டிக்காரனிடத்திற்குப் போவோம் வாருங்கள் என்பார்கள்; இந்நாளிலே தீர்க்கதரிசி என்னப்படுகிறவன் முற்காலத்தில் ஞானதிஷ்டிக்காரன் என்னப்படுவான்.

10. அப்பொழுது சவுல் தன் வேலைக்காரனை நோக்கி: நல்லகாரியம் சொன்னாய், போவோம் வா என்றான்; அப்படியே தேவனுடைய மனுஷன் இருந்த அந்தப் பட்டணத்திற்குப் போனார்கள்.

# செய்தி: விசுவாசமும் அதற்கெதிரான அறிவுக்கூர்மையும், ஏப்ரல் 1, 1962, பத்தி எண் 278-305

அங்கே பின்பாக நான் சகோதரன் ஈவான்ஸோடன் பேசிக் கொண்டிருந்தேன். சிறிது காலத்திற்கு முன் அவர் இங்கே வருகின்றபோது (இவ்வளவு தூரம் அவர் காரோட்டிக் கொண்டு வருகின்றார்); அவருடைய கார் தொலைந்து போனது. அங்கே மில்லர் கடையின் அருகில் சாவியுடனே காரை நிறுத்திச்சென்று விட்டார். யாரோ ஒருவன் வந்து அதைத் திருடிச்சென்று விட்டான். அவர் எல்லா பொருளையும் காருக்குள்ளாக வைத்திருந்தார். அவர் வந்தார். (அவர், மற்றும் சகோதரன் ஃபிரட், சகோதரன் டாம் மற்றும் சிலரோடு என் வீட்டிற்கு வந்திருந்தார்). அவர் வந்து என்னிடம் கூறினார்... ஆம், ஒரு சிறு பிள்ளை தன்னுடைய மிட்டாயை யாரோ ஒருவர் பிடுங்கிவிடும் போது எப்படி காணப்படுகின்றதோ அது போல அவர்

காணப்பட்டார்; மிகவும் நொந்து போன நிலையில் அவர் இருந்தார் என்று உங்களுக்குத் தெரியுமா. அவர், "என்ன செய்வதென்று எனக்குத் தெரியவில்லையே" என்றார்.

நான் "சரி...." என்றேன்.

இப்பொழுது, அது என்னவாயிருந்தது? இப்பொழுது அவர்கள் வருகின்றனர். முதலாவதாக காரியம் என்ன? வார்த்தையிடம் செல்வது, பிதாவிடம் கேட்பது, "நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக் கொள்வதெதுவோ," என்ன? வார்த்தையுடன் தரித்து நில்லுங்கள்; சரியாக வார்த்தையுடன் அப்படியே தரித்து நில்லுங்கள்.

"சரி நாம் ஜெபிக்கலாம்" என்று நான் கூறினேன். நாங்கள் தரையில் முழங்காலிட்டு ஜெபிக்க ஆரம்பித்தோம். அப்போது நான், "பிதாவே, நான் உம்மிடத்தில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வருகிறேன். இவர் ஒரு வாரத்தில் சில நாட்களே வேலை செய்கின்ற ஒரு சகோதரன். இதோ இங்கே இருக்கின்றார் (அந்த பழைய நொறுங்கின நிலையில் உள்ள கார்களை

சரி செய்து பொருத்தும் வேலையைத் தொடர்ந்து செய்து அவருடைய கைகளெல்லாம் மிகவும் தேய்ந்த நிலையில் இருந்தது) ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் கூட்டத்திற்கு வருவதற்கான பயண காசுக்காகக் கடுமையாக உழைக்கும் ஒரு சகோதரன். போஷிக்கப்படத்தக்கதாக அவருக்கு சிறு பிள்ளைகளும் உள்ளன. சபைக்கு வருவதற்கான பயண செலவுக்கு மட்டும் சுமார் ஐம்பது அல்லது எழுபத்தைந்து டாலர்கள் அவருக்குச் செலவாகும். (ஆம்? அது சரியே!) நாங்கள் வார்த்தைக்காக தைரியமாகப் போராட பிரயத்தனம் செய்ய முயற்சிக்கையில் அந்த வார்த்தையைக் கேட்பதற்காக அவர் இங்கே வருகின்றார்," என்று ஜெபித்தேன். மேலும் நான், "இப்பொழுது, யாரோ ஒரு தீய நபர் இவருடைய காரை திருடிச் சென்றுவிட்டான்" என ஜெபித்தேன். அது என்னவாயிருந்தது? நான் "இப்பொழுது, கர்த்தாவே இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் இவருடைய காரை இவரிடம் திரும்பத் தருமாறு நான் உம்மிடம் ஜெபத்தை ஏறெடுக்கி றேன்" என்று ஜெபித்தேன்.

நான் என்ன செய்தேன்? நான் வார்த்தையை, அந்த வாக்குத்தத்தத்தை தேவனுக்கு முன்பாக

நான் வைத்து, இயேசுவின் நாமத்தில் அதை முத்திரையிட்டு, அந்த வார்த்தையை நான் அனுப்பினேன். அது நேராக சாலையில் சென்று, சரியாக எந்த இடத்திலிருந்து திருடு போனதோ அங்கிருந்து ஆரம்பித்துச் சென்றது. ஒரு வேட்டை நாய் முயலின் தடம் பற்றிச் சென்று வேட்டையாடுவது போல. பாருங்கள்? இதோ அவர் கூக்குரலிட்டுக் கொண்டே சாலையில் சென்றார். கெண்டக்கியிலுள்ள பௌலிங் கிரீனிற்கு அரை மைல் தூரத்திற்கு சென்றடைந்தார். என்ன சம்பவித்தது? வார்த்தை அவனைக் கண்டுபிடித்தது.

அப்பொழுதே ஒரு தரிசனம் என்னிடம் வந்தது; ஒரு மனிதனை நான் கண்டேன், மஞ்சள் நிறம் போல் காணப்பட்ட சட்டையை அவன் அணிந்தவனாக அவன் அந்த காரை ஓட்டிக் கொண்டிருந்தான், அவன் ஒரு வாலிபன், ஒரு காலத்தில் அவன் ஒரு கிறிஸ்தவனாக இருந்தவன், அந்த வார்த்தை அவனை அடித்து, "நீ தவறு செய்கின்றாய்!" என்றது. வார்த்தை அவனைப் பிடித்தது. அவர் தம்முடைய வார்த்தையை அனுப்பினார் (பாருங்கள். பாருங்கள்?) அவனைப் பிடித்தார். "நீ ஒரு நாளிலே இக்காரியத்திற்காக

பிடிப்படப்போகின்றாய், இந்த காரியத்தை செய்ததற்காக சட்டம் உன்னைப் பிடிக்க போகின்றது. திரும்பு, இந்த காரை அங்கே எடுத்துச்செல்.''

வார்த்தை அவனைப் பிடித்தது, ஒரு காலத்தில் அவன் ஒரு கிறிஸ்தவனாக இருந்தான். அவன் அந்தக் காரை அந்த இடத்திற்கு கொண்டு வந்து தெரு ஓரமாக அவன் நிறுத்துவதை நான் பார்த்தேன். அப்பொழுது நான், ‘‘சகோதரரே, நீங்கள் அந்த குறிப்பிட்ட வழியில் செல்லுங்கள். அங்கே உங்கள் கார் இருப்பதைக் காண்பீர்கள். அவன் அந்த இடத்திற்கு வரும் வரைக்கும் இங்கே காத்திருங்கள். சரி, காரில் எரிபொருள் முழுவதுமாக நிரப்பப்பட்டிருந்ததா?'' என்றேன்.

அதற்கு அவர்,''ஆம்'' என்றார்.

நான், ‘‘எந்தப் பொருளும் எடுக்கப்படவில்லை, ஆனால் பாதி எரிபொருள் மட்டுமே இருக்கும்; ஏனெனில் பௌலிங் கிரீன் இடத்திற்கு செல்ல பாதி தூரத்திற்கே, சுமார் 100 மைல் தூரம் செல்வதற்கு பாதி எரிபொருள் செலவாகும்'' என்று கூறினேன். அவர் சென்று பார்த்த போது, கூறப்பட்ட பிரகாரமாகவே அந்தக்

கார் அப்படியே நின்று கொண்டிருந்தது. அது முற்றிலும் சரியாக அப்படியே நின்றிருந்தது. அது என்னவாயிருந்தது? வார்த்தை சென்று அவனைப் பிடித்தது. திரும்ப வந்து கூறினார்...

சிறிது காலத்திற்கு முன்னர் ஒரு மனிதன் அவனுக்கு கார் வாங்கிக் கொடுக்கையில், அவன் அதற்கான பணத்தைக் கொடுக்காமல் காரை எடுத்துக்கொண்டு ஓடிவிட்டான். பாருங்கள்? அவர் கூறினார், "சகோதரன் பிரான்ஹாம், நான்...."

"பாவம் இந்தமனிதன்" என்று நான் நினைத்தேன் (இவருக்கு அவன் 400 டாலர்கள் கடன் கொடுக்க வேண்டியவனாக இருந்தான்). அதற்கு நான், "நான் ஜெபிக்கிறேன்" என்றேன். நான் வார்த்தையை அனுப்பினேன். அந்த வார்த்தை அவன் சென்ற பாதையில் சென்று அவனைக் கண்டுபிடித்தது. நாங்கள் அந்த மனிதனைக் காணச் சென்றபோது, அவன் ஒரு கிறிஸ்தவன் அல்ல என்று நாங்கள் அறிந்துக் கொண்டோம். பாருங்கள்? அவன்... அவன்... அவன் சிரித்தான்... ஒரு சமயம் அவனை ஒரு சபைக்குச் செல்லும்படிக்குக் கூறினார்கள். அதற்கு

அவன், “உம், அந்தப் பிரசங்கி பிரசங்கம் செய்கையில் நான் அழகான பொன் மேனியுடைய இளம்பெண்கள் இருக்கிறார்களா என்று பார்த்துக்கொண்டிருப்பேன்” என்றான். ஆகவே (நீங்கள் பாருங்கள்?) உங்களால் அதை... ஆமாம், அது... அது... அது பிசாசாகும், அது... பாருங்கள்?

ஆகவே வார்த்தையில் அவனிடம் நேரடியாகத் தொடர்பை வைக்க முடியவில்லை. ஆனால் வார்த்தை என்ன செய்தது? அவனை கண்காணித்துக் கொண்டேயிருந்தது. பாருங்கள்? அது மாத்திரம்... சகோதரன் வெல்ச் நம்பிக்கையை உறுதியாகப் பற்றியிருந்தார். “எல்லாம் சரியாகிவிடும், எல்லாம் சரியாகிவிடும்” என்று கூறினார். அந்த வார்த்தை அவனைத் தொடந்து சென்று கொண்டேயிருந்தது. “நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக் கொள்வதெதுவோ,” பாருங்கள்? வார்த்தை அவனைப் பின்தொடர்ந்து சென்றது. முதலாவதாக காரியம் என்னவென்று உங்களுக்குத் தெரியுமா, அவருடைய பையன்களில் ஒருவன் அங்கே சாலையில் காரோட்டிக் கொண்டிருந்தான்.

அப்பொழுது அது அங்கே இருந்தது. அந்தக் காரில் ஒரு மனிதன் இருப்பதைக் கண்டு, அவனுடைய எண்ணைக் குறித்துக் கொண்டு, சகோதரன் உட்டிடம் (Wood) வந்து அதை தெரிவித்தான். அது எங்கே இருக்கிறதென்று கண்டுபிடிக்க அவர்கள் தொலைபேசியில் அழைத்தனர். அவன் பௌலிங் கிரீனில் இருந்தான்.

பரலோகத்தின் தேவன் அதை அறிவார். அதைக்குறித்து ஒரு வார்த்தை கூட நான் கேள்விப்படவில்லை, அதைக் குறித்து ஒன்றுமே எனக்குத் தெரியாதிருந்தது.

கடந்த ஞாயிறு மதியவேளையில், (ஒரு வாரத்திற்கு முன்னர்), நாங்கள் பிரசங்கத்தை முடித்தப் பிறகு அங்கே சென்று என்னுடைய உடைகளை மாற்றிக் கொண்டு, சகோதரன் வெல்ச்சின் இடத்தில் அடுத்த நாள் இரவு கூட்டத்திற்காக ஃபிளாரிடாவிற்கு புறப்பட ஆயத்தமானேன். நான் காருக்குள்ளாக சென்றவுடனே அந்த மனிதனை நான் பார்த்தேன். அப்பொழுது நான் கூறினேன், “சகோதரன் வெல்ச்...” (அப்பொழுதே என்னால் அதை

அவரிடம் கூறக்கூடாதிருந்தது. அவரே காரியத்தைக் குறித்து பேசவேண்டியவராயிருந்தார். பாருங்கள், அங்கே மேடா தன்னுடைய தீர்மானத்தை செய்ய வேண்டியிருந்தது போல, பாருங்கள்?) நான், "நாம் பௌலிங் கிரீன் வழியாக செல்லப் போகிறோம்" என்று கூறினேன்.

அவர், "அது வழியிலிருந்து முப்பது மைல் தூரமிருக்கும்" என்றார்.

சாலையில் சென்றுக் கொண்டிருந்தோம்; அப்பொழுது நான் "ஓ, இவர் - இவர் இதைப் புரிந்து கொள்வார் (பாருங்கள்?), இவர் அறிந்து கொள்வார். இவர் கண்டிப்பாக அதை அறிந்து கொள்ளத்தான் வேண்டும்" என்று நினைத்தேன்.

சகோதரி ஈவான்ஸ் மற்றும் நானும் இவருடன் கூட பிரயாணித்துக் கொண்டிருந்தோம். சிறிது நேரம் கழித்து அவர் என்னிடம், "என்ன சகோதரன் பிரான்ஹாம், எனக்கு ஒன்றுமே புரிந்து கொள்ள முடியாது என்று எண்ணுகிறீரா? சற்று முன்னர் நீர் பௌலிங்க் கிரீன் என்று கூறினீரே" என்றார்.

"ஆமாம்"

அவர் மேலும், “என்னுடைய பணத்தை எடுத்துக் கொண்டு ஓடிப்போன அந்த மனிதனைத் தெரியுமா?” என்றார்.

“ஆமாம்”

“அந்த மனிதன் பௌலிங்க் கிரீனில் தான் இருக்கின்றான், அதைக் குறித்து நான் சிந்தித்துக் கொண்டிருந்தேன். நான் அந்த இடத்திற்குள் போய் அவன் எங்கே இருக்கின்றான் என்று கண்டுபிடிக்கப் போகிறேன். ஆகவே நான் போகப் போகிறேன்....”

அதற்கு நான், “நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? நீங்கள் அங்கே சென்று உங்கள் பணத்தை அவனிடமிருந்து வாங்கப் போகிறீர்களா?” என்றேன்.

இப்பொழுது, (பாருங்கள்), நான் அவரிடம் அதை கூறுவேனானால் அப்பொழுது அவர்... பாருங்கள்? அவர் தாமாகவே ஒன்றைச் செய்ய வேண்டியவராக இருந்தார். பாருங்கள்? அவர் ஒன்றைச் செய்ய வேண்டியவராக இருந்தார். இப்பொழுது நான் அதைக்கூறினால், சரியாக நான் கண்டிருந்த தரிசனத்தின் போக்கு சரியாக அமையாமல் அதை உடைத்துவிடும், பாருங்கள்?

ஆகவே நான் அப்படியே சற்று விட்டுவிட வேண்டியிருந்தது...

பாருங்கள்? அது... ஏன் இயேசு அங்கே நின்று கொண்டு மரியாள் மற்றும் மார்த்தாளிடம், "கல்லை எடுத்துப் போடுங்கள்" என்று கூற வேண்டியிருந்தது? அவர் தேவன். அவர், "கல்லே, நீ இல்லாமல் போகக் கடவாய்" என்று கூறியிருப்பாரென்றால், அப்பொழுதே அது இல்லாமல் போயிருக்கும். ஆனால் அவள் செய்ய வேண்டியது ஒன்று இருந்தது.

அவர் ஏன் அங்கே நின்று கொண்டு அறுவடையைப் பார்க்க வேண்டியதாக இருந்தது? (அவர் அறுப்புக்கு எஜமான் என்று நீங்கள் விசுவாசிக்கிறீர்களா?) அவர் தம்முடைய சீஷர்களை நோக்கி, "ஆதலால், அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள்" என்று கூறினார். வேறு விதமாகக் கூறுவோமானால், "நான் என்ன செய்யப் போகின் றேனோ அதை நான் செய்யும்படிக்கு நீங்கள் என்னைக் கேளுங்கள்" என்பதேயாகும்.

பாருங்கள்? நாங்கள் நண்பர்கள் ஆவர், நாங்கள் - நாங்கள் - அது ஒரு சபையாகும். நாங்களாகவே செய்ய வேண்டிய காரியங்கள் தனித்தனியே எங்களுக்கு உண்டு. நீங்கள் செய்ய வேண்டிய காரியங்களும் உங்களுக்கு உண்டு. இதோ சுவிசேஷம் இங்கே இருக்கின்றது. அதை நான் அறிவேன். ஆனால் நீங்கள் இங்கே அப்படியே உட்கார்ந்திருக்க மாத்திரம் செய்து சுவிசேஷத்தை பிரசங்கிக்கவில்லை என்றால், அது எந்தவித நன்மையை உங்களுக்கு பிறப்பிக்கும்? நீங்கள் ஏதாவதொன்றைச் செய்ய வேண்டியவர்களாக இருக்கிறீர்கள். நீங்கள்... "சரி, தேவனால் சுகமாக்க முடியும் என்று நான் நம்புகிறேன். ஆனால் எனக்கு ஒன்றுமே தெரியவில்லை" என்று நீங்கள் கூறலாம். எழுந்து நின்று அந்த வார்த்தை உங்களுடைய வார்த்தையாக மாறட்டும். அதை விசுவாசியுங்கள். அதை மூளையைக் கொண்டு யோசிக்காதீர்கள்; அதை அப்படியே விசுவாசியுங்கள்.

நான் கூறினேன், "சரி..." (அவர் போகவில்லையெனில் தன்னுடைய பணத்தைப் பெற்றுக் கொள்ளாமல் இழக்கப்போகின்றார் என்பது எனக்குத் தெரியும்). நான், "அது நானாக

இருக்குமென்றால், அது நானாக இருக்குமென்றால், சரியாக இப்பொழுதே நான் சென்று என்னுடைய பணத்தைத் திரும்பப் பெறுவேன்'' என்று கூறினேன். ஆகவே அவர் சென்றார். அவர் சென்று கட்டிலில் தூங்கிக் கொண்டிருந்த அந்த மனிதனை எழுப்பும்போது அவன் சிறிது பணத்தை வைத்திருந்தான். பிறகு அவன் பக்கத்து வீட்டு நபரிடம் பணம் பெற்று மீதமுள்ள தொகையையும் அவன் திரும்பக் கொடுத்தான். அது என்ன? அதுதான் வார்த்தையாகும். பாருங்கள். அது இடத்தைக் கண்டுபிடிக்குமானால், அது சூழ்நிலையையே திருப்புகின்றதாக இருக்கிறது.

இப்பொழுது, தெய்வீக சுகமளித்தலைக் குறித்தும் அதே தான். இப்பொழுது, சகோ. வெல்ச், ''சரி, என்னால் அங்கே செல்ல முடியாது என்று நினைக்கின்றேன். வேறு வழியாக நாம் சென்று விடலாம் என்று நான் நினைக்கின்றேன்'' என்று கூறியிருப்பாரானால் எப்படியிருக்கும். அந்த மனிதனும் ''சரி நானும் அங்கே போகக் போவதில்லை. என்ன, இந்த கார்...'' என்று கூறியிருந்திருப்பாரானால் எப்படியிருக்கும். பாருங்கள்? அது நடந்தே இருக்காது. ஆகவே

நீங்கள் விசுவாசித்தாக வேண்டும். அதை நீங்கள் விசுவாசித்துத்தானாக வேண்டும். அப்பொழுது... அந்த விசுவாசம் என்னும் ஒரு சூழ்நிலைக்குள் விழுகின்றது. அப்பொழுது அது காரியத்தைப் பிறப்பிக்கத்தான் வேண்டியதாயிருக்கிறது. அது காரியத்தைப் பிறப்பிக்கத்தான் வேண்டும். ஓ, அது...

மரித்துப் போயிருக்கின்ற ஒருவர் உயிரோடெழுப்பப்படும்போது என்ன சம்பவிக்கின்றது என்பதைக் குறித்து நீங்கள் எப்பொழுதாவது நினைத்துப் பார்த்ததுண்டா? ஃபின்லாந்து தேசத்தில் மரித்துப் போயிருந்த அந்த சிறு பையன் உயிரோடெழுப்பப்பட்டதைக் குறித்து நீங்கள் நினைத்துப் பார்த்ததுண்டா? அவனுடைய ஆவி அவனை விட்டுப் போயிருந்தது. ஆகவே வார்த்தையானது விண்வெளிக்கு அப்பால் சென்று அந்த சிறு ஆத்துமாவை எடுத்து, அதை நேராக அந்த இடத்திற்கு திரும்பிக் கொண்டு வர வேண்டியதாக இருந்தது. பாருங்கள்? எப்படி அதனால் அதைச் செய்ய முடியும்? அது அந்த வார்த்தையாகும்: அது வியாதியஸ்தரை சுகப்படுத்துகின்றது. மரித்தோரை உயிரோடெழுப்புகின்றது. பாருங்கள்?

எப்படி அவர் அதைச் செய்யப் போகின்றார்? அது தண்ணீர் பாய்ச்சப்பட்ட வார்த்தையினாலே மாத்திரம் தான் வரவேண்டியதாயிருக்கின்றது. அவர் தரிசனத்தை காண்பித்திருக்கிறார். ஆகவே அது நடந்தேயாக வேண்டும். அந்தப் பையன் அங்கே மரித்துக் கிடந்தான்; இரண்டு வருடங்களுக்கு முன்னர் அவர் கூறியிருந்தபடியே எல்லா காரியமும் ஒரு துளியும் மாறாமல் அப்படியே அங்கே அமைந்திருந்தது. அங்கே அது இருந்தது. மலையிலிருந்து இறங்கி வந்த கரடியைக் குறித்தும், மற்றும் என்னவாயிருந்தாலும் அதைக் குறித்து நான் கூறுவதுண்டு. அது நடந்தேயாக வேண்டும், அந்த விதமாகவே அது இருந்தேயாக வேண்டும். பாருங்கள்?

அது என்ன செய்கின்றது? ஒரு வார்த்தை, நான், "பரலோகப்பிதாவே, என்னுடைய தேசத்தில் நான் இருக்கும் போது, இந்த சிறு பையன் மரித்த நிலையிலிருந்து உயிரோடெழுந்திருப்பான் என்று இரண்டு வருடங்களுக்கு முன்னரே நீர் என்னிடம் கூறியிருந்தீர்; ஆதலால் உம்முடைய வார்த்தையை அடிப்படையாகக் கொண்டு, உம்முடைய வாக்குத்தத்தத்தை... முதலாவதாக "விசுவாசிக்

கிறவர்களை அந்த அடையாளங்கள் பின் தொடரும்'' என்று வார்த்தை கூறியுள்ளது. நீர் உம்முடைய சீஷர்களை முன்பாக அனுப்பி, வியாதியஸ்தர்களை சுகமாக்கவும், மரித்தோரை உயிரோடெழுப்பவும், பிசாசுகளைத் துரத்தவும் அவர்களுக்குக் கூறினீர். பிறகு, நான் என்னுடைய தேசத்தில் இருக்கும்போது ஒரு தரிசனத்தின் மூலமாக இந்தச் சிறிய பையன் திரும்பவுமாக உயிர் பெற்று ஜீவிக்கப்போகிறான் என்று எனக்கு காண்பித்தீர் அல்லவா. ஆகவே மரணமே, நீ இன்னுமாக இவனை பிடித்து வைத்திருக்க முடியாது. நான் கர்த்தருடைய வார்த்தையைக் கொண்டிருக்கிறேன்'' என்று கூறினேன். நானல்ல, நான் அந்த வார்த்தையல்ல, அவர்தான் அந்த வார்த்தையாவார். பாருங்கள்? நான் வார்த்தையாக இருந்திருந்தால்...

வார்த்தையாக இருக்கக்கூடிய நபர் ஒருவர் தான் உண்டு. அவர் இயேசு. ஒரு கன்னிப் பிறப்பின் மூலமாக வந்த தேவனுடைய உரைக்கப்பட்ட வார்த்தை அவராவார். நான் ஒரு தாறுமாறாக்கப்பட்டவன். பாருங்கள்? என் தந்தையும் தாயும் சேர்ந்ததினால் ஏற்பட்ட ஒரு விளைவே நானாவேன். நானாகிய இது மரிக்க

வேண்டும். (பாருங்கள்?) சரீரம் மரிக்கத்தான் வேண்டும். ஆனால் இயேசுவைப் பொறுத்த வரையில் அப்படிக்கிடையாது; அவர் வார்த்தையாக இருந்தார். ஒரு கன்னிப் பிறப்பில் அவர் பிறந்தார். சகோதரனே, எந்த ஒரு பெண்ணுக்கும், ஆணுக்கும் அல்லது வேறெந்த ஒன்றும் அவருடைய பிறப்பினோடு எந்த விதமான ஒரு தொடர்பும் கிடையாது. அந்தப் பெண் ஒரு ஈனும் கருவியாக (Incubator) மாத்திரமே இருந்தாள். அவர் அவளிடமிருந்து பால் அருந்தினார். அது எல்லாமே உண்மையானது தான். ஆனால் ஒன்றை நான் உங்களுக்குக் கூறட்டும்; அவர் தேவனாக இருந்த அதே தேவன் தான்! அந்த பிறப்பில் பாலுணர்வுக்கான எந்த ஒரு காரியமும் இல்லை. அந்த இரத்தத்தின் மூலமாக ஜீவனைக் கொண்டு வர வேண்டியிருந்ததால் அவர் பாலுணர்வுக்கு அப்பாற்பட்டதாக அவருடைய பிறப்பு இருக்க வேண்டியதாயிற்று. இன்னும் சில நிமிடங்களில் அதை நாம் பார்ப்போமாக.

ஆகவே சற்றுப் பாருங்கள். அவர் அந்த வார்த்தையாக இருந்தார். ஆனால் கர்த்தருடைய

வார்த்தையானது… தீர்க்கதரிசிகள் அந்த வார்த்தையாக இருக்கவில்லை. ஆனால் கர்த்தருடைய வார்த்தை தீர்க்கதரிசிகளுக்கு வந்தது. வார்த்தை அவர்களிடம் வந்தது. இன்றைக்கும் அந்த விதமாகத்தான் நடக்கின்றது. அந்தச் சிறு பையனுக்காக வார்த்தை வந்தது. அது என்ன? ஒரு தரிசனம். அந்தக் கரடியைக் குறித்தென்ன? அது மற்ற காரியங்களை அப்படியே காத்துக் கொள்கின்றது.


இப்பொழுது முதலாவதாக அது பேசப்பட வேண்டும். "மரணமே, அவனை திரும்பக் கொடு! இயேசு கிறிஸ்துவின் நாமத்தில், அந்த வார்த்தையை நான் அனுப்புகிறேன்." திருடப்பட்டக் காருடன் பௌலிங்க் கிரீனில் சென்று கொண்டிருந்த அந்த பையனை அது பிடித்தது போல உடனடியாக அது பிடித்துக் கொள்ளும். இதோ அது சென்று அதை மறுபடியுமாக பிடித்துக் கொள்கின்றது. அது என்ன செய்கின்றது? அந்த சிறு ஆவியை அது பிடித்து அதைத் திரும்பி நேராக இங்கே கொண்டுவந்து, அவ்வாறு செய்யும் என்று வார்த்தை கூறியிருந்தபடியே, அந்த ஆவியைக் கொண்டு வந்து சரீரத்திற்கு அதை அளிக்கின்றது.

புரிகின்றதா. அதைச் செய்வது என்ன? விசுவாசம், அறிவு அல்ல.

★★★★★

# தீர்க்கதரிசனம் 4

## மரித்துப் போன குழந்தை உயிரடைதல்



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

**செய்தி:** உன் வாழ்க்கை சுவிசேஷத்திற்கு தகுதியாய் அமைந்துள்ளதா?, ஜூன் 30, 1963, பத்தி எண் 108-118

அண்மையில் மெக்ஸிகோவில் ஒரு சிறு சம்பவம் நடந்தது. நான் நடத்தின கூட்டங்களில் ஒன்றில் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட ஜெனரல் வால்டினா என்பவரின் பாதையில் வெளிச்சம் பிரகாசித்தது. அந்த சிறந்த கத்தோலிக்க வீரர், மெக்ஸிகோவில் அப்பொழுது உயர்ந்த பதவியில் இருந்த தளபதிகளில் ஒருவர், அவர் தாழ்மையுடன் பீடத்துக்கு வந்து பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொண்டார். அவர் மெக்ஸிகோவுக்குத் திரும்பிச் சென்று, நான் அங்கு வர வேண்டுமென்று என்னை வருந்திக் கேட்டுக் கொண்டார். முடிவில் நான் அங்கு செல்ல தீர்மானித்தேன்; தேவன் என்னை அங்கு வழிநடத்தினார் - எனக்கு அதற்கான தரிசனம் கிடைத்தது. அதைக் குறித்து என் மனைவியிடம் கூறினேன். அங்கு நான் சென்றேன்.

அவர் முக்கிய தளபதிகளில் ஒருவராக இருந்தபடியால் – நான்கு நட்சத்திரங்களையுடைய தளபதி – அவர் அனுமதி பெறுவதற்காக தலைமை அலுவலகத்துக்கு – அரசாங்கத்தினரிடம் – சென்றார். அவர்கள் பிராடெஸ்டெண்டுகளுக்கு விரோதிகள் என்று உங்களுக்குத் தெரியும். இது வல்லமையான கூட்டமாயிருக்கும் என்று அவர்கள் அறிந்திருந்தனர். அவர் அங்கு சென்று பாதுகாப்பிற்காக அதிகாரிகளைப் பெற்றார். கூட்டம் நடத்துவதற்கென ஒரு பெரிய மைதானம் கொடுக்கப்பட்டது. அவர்கள் இந்த விதமாக என்னை அங்கு கொண்டு செல்ல எண்ணினர். அரசாங்க அழைப்பின் பேரில் அவர்கள் என்னை அங்கு கொண்டு சென்றனர்.

அங்கு ஒரு பேராயர் – கத்தோலிக்க சபையில் சிறந்து விளங்கிய பேராயங்களில் ஒருவர் – ஆளுநரிடம் சென்று, “ஐயா, கத்தோலிக்கர் அல்லாத ஒருவரை நீங்கள் கொண்டு வர எத்தனித்துள்ளதாக கேள்விப்படுகிறேன்” என்றார்.

அவர், “ஆம், அதனால் என்ன?” என்றார்.

பேராயர், "அப்படிப்பட்ட ஒருவரை நீங்கள் கொண்டு வரக்கூடாது. இதற்கு முன்பு இந்த அரசு அவ்வாறு செய்ததில்லை" என்றார்.

அவர், "ஆனால் இந்த முறை செய்துவிட்டோம். அவர் பிரபலமான ஒருவர். அவர் பேசுவதைக் கேட்க ஆயிரக்கணக்கான மக்கள் வருவதாக கேள்விப்படுகிறேன். ஜெனரல் வால்டினா எனது நெருங்கிய நண்பர்" என்றார். ஜனாதிபதியே பிராடெஸ்டெண்டு என்று உங்களுக்குத் தெரியும். அவர் ஒரு மெதோடிஸ்டு. எனவே அவர், "எனக்குத் தெரிந்த வரையில் அவர் பிரபலமானவர். இங்குள்ள ஜெனரல் வால்டினா அவருடைய கூட்டத்தில் இரட்சிக்கப்பட்டார். அவர் பேசுவதைக் கேட்க ஆயிரக்கணக்கானவர்கள் கூடி வருவார்கள் என்று அவர்கள் கூறுகின்றனர்" என்றார்.

பேராயர், "ஐயா, அவர்கள் எப்படிப்பட்டவர்கள்? படிப்பறிவில்லாதவர்கள் தான் அப்படிப்பட்ட ஒரு மனிதன் பேசுவதைக் கேட்க வருகின்றனர்" என்றார்.

ஜனாதிபதி, "நீங்கள் அவர்களை ஐந்நூறு ஆண்டுகளாக வைத்திருந்தீர்களே. பின்னை ஏன்

அவர்கள் படிப்பறிவில்லாதவர்களாக இருக்கின்றனர்?'' என்று கேட்டார். அவ்வளவு தான். அத்துடன் அது முடிவு பெற்றது. ஓ, என்னே! அது அவரை மடங்கடித்தது. ஆம், ஐயா! ஆம்!

மரித்துப் போன அந்த சிறு குழந்தை உயிர் பெற்றபோது, நான் அந்த மனிதனிடம் ஆள் அனுப்பினேன். அந்த பெண் ஸ்பானிய மொழியில், ''குழந்தை காலை 9.00 மணிக்கு மரித்து போனது'' என்று கூறிக் கொண்டிருந்தாள். அடை மழை பெய்து கொண்டிருந்தது. ஒவ்வொரு இரவும் ஏறக்குறைய பத்தாயிரம் பேர் இரட்சிக்கப்பட்டு, கிறிஸ்துவினிடம் கொண்டு வரப்பட்டனர்.

அன்று முன்தின இரவு, வயோதிப குருடர் ஒருவர் மேடையின் மேல் பார்வையடைந்தார். இந்த கூடாரத்தின் அளவுக்கு மூன்று அல்லது நான்கு மடங்கு, இவ்வளவு உயரத்தில் பழைய சால்வைகளும், தொப்பிகளும் அங்கு கிடந்தன.

அவர்கள் கயிற்றின் வழியாக என்னை உள்ளே இறக்கினார்கள். நான் அங்கு சென்று விசுவாசத்தினால் பிரசங்கிக்கத் தொடங்கினேன்.

பில்லி என்னிடம் வந்து, “அப்பா, அந்த பெண்ணுக்கு நீங்கள் ஏதாவது செய்ய வேண்டும். அங்கு முன்னூறு வாயிற்காப்போர் நின்றுகொண்டிருக்கின்றனர். அப்படியிருந்தும், நூறு பவுண்டு எடையுள்ள அந்த பெண்ணை அவர்களால் தடுத்து நிறுத்த முடியவில்லை” என்றான். அவள் அழகான பெண். இவ்வளவு உயரமுள்ளவள். அது ஒருக்கால் அவளுடைய முதல் குழந்தையாக இருக்கலாம். அவளுக்கு இருபத்து மூன்று அல்லது இருபத்தைந்து வயதிருக்கும்.

அவள் அங்கு நின்று கொண்டிருந்தாள், அவளுடைய கூந்தல் அவிழ்ந்து தொங்கிக் கொண்டிருந்தது. அவள் கையில் குழந்தையை வைத்திருந்தாள். அவள் ஜெப வரிசைக்கு விரைந்து ஓடுவாள். அங்கு நின்று கொண்டிருந்தவர் அவளைப் பின்னால் தள்ளுவார். அவள் குழந்தையை இடுப்பில் வைத்துக் கொண்டு, அவர்கள் மேல் ஏறி, அல்லது அவர்களுடைய கால்களின் வழியாக புகுந்து வந்து விடுவாள். அவர்கள் அவளை மேடையிலிருந்து உதைத்து தள்ளுவார்கள்.

அவளுக்கு கொடுக்க அவர்களிடம் ஜெப அட்டை இல்லை.

பில்லி, "அப்பா, மழையிலும் வெயிலிலும் இரண்டு மூன்று நாட்களாக மற்றவர்கள் அங்கு நின்று கொண்டிருக்கும் போது, ஜெப அட்டை இல்லாமல், மரித்துப்போன குழந்தையை வைத்திருக்கும் இவளை, அவர்களைக் காட்டிலும் முன்னால் அனுமதித்தால், அது சண்டை விளைவிக்கும்" என்றான்.

நான், "அது உண்மை தான்" என்றேன். சகோ. மூர் அங்கிருந்தார். அவர் என்னைப் போன்ற வழுக்கை தலையுடையவர். நான், "அனுப்பலாம்...." என்றேன். சில சகோதரர்கள்.... நமது கூடாரத்தை சேர்ந்த சகோதரர்களில் ஒருவர்... அவர் இப்பொழுது மகிமையில் பிரவேசித்திருக்கிறார். அவருடைய பெயர் ஞாபகத்துக்கு வரவில்லை. அவர் பின்னால் நின்று கொண்டிருக்கிறார். நான், "சகோ. மூர், நீங்கள் கீழே சென்று அந்த குழந்தைக்கு ஜெபம் செய்யுங்கள். அது யாரென்று - நீங்களா நானா என்று அவள் அறிய மாட்டாள். அவளுக்கு ஆங்கிலமும் பேசத் தெரியாது" என்றேன்.

சகோ, மூர், "சரி சகோ, பிரன்ஹாம்" என்றார்.

அவர் கீழே செல்லப் புறப்பட்டார். நான் அவரிடம், "நான் கூறின விதமாக கூறுங்கள்..." என்றேன். **அப்பொழுது ஒரு மெக்ஸிகன் குழந்தை எனக்கு முன்னால் உட்கார்ந்து கொண்டு சிரிப்பதை நான் தரிசனத்தில் கண்டேன்.** நான் உடனே, "ஒரு நிமிடம் பொறுங்கள். அந்த பெண்ணை உள்ளே விடுங்கள்" என்றேன்.

பில்லி, "அப்பா, என்னால் முடியாது. அவள்...." என்றான்.

நான், "பில்லி, நான் தரிசனம் கண்டேன்" என்றேன்.

அவன், "ஓ, அப்படியானால் சரி" என்றான்.

எனவே நாங்கள் கூட்டத்தை விலக்கி, அவளை உள்ளே கொண்டு வந்தோம். அவள் கையில் ஜெபமாலையைப் பிடித்துக் கொண்டு வந்து முழங்கால்படியிட்டாள். நான், "எழுந்திரு" என்றேன்.

நான், "பரலோகப் பிதாவே, நீர் என்ன செய்யப்போகிறீர் என்று தெரியவில்லை. இந்த

குழந்தைக்கு ஜெபம் செய்து, அந்த பெண்ணை திருப்திப்படுத்த வேண்டுமென்று நினைக்கிறீரோ என்னவோ தெரியாது. என்னவாயிருப்பினும், நான் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் இந்த குழந்தையின் மேல் என் கைகளை வைக்கிறேன்" என்றேன். - அன்றொரு நாள் மரித்து தரையில் கிடந்த சகோ. வேவுக்கு நான் செய்தது போல். அப்பொழுது அந்த கம்பளித்துணி உதைப்பினால் அசையத் தொடங்கினது. குழந்தை அலறி அழுதது. அது மீண்டும் உயிர்பெற்றது.

அந்த குழந்தை காலை 9.00 மணியளவில் மருத்துவமனையில் நிமோனியா ஜுரத்தினால் மரித்துப்போனது என்னும் உறுதிப் பத்திரத்தை வாங்குவதற்காக ஒரு ஆளை - சகோ. எஸ்பியோனாவை - அந்த பெண்ணுடன் மருத்துவரிடம் அனுப்பினேன். அப்பொழுது நேரம் இரவு 10 மணியாக இருந்தது. அவரும் மருத்துவரிடம் உறுதிப்பத்திரத்தை வாங்கி வந்தார்.

செய்திதாள்கள் இச்செய்தியை வெளியிடாமல் இருக்க முடியவில்லை. எனவே அவர்கள் வந்து என்னைப் பேட்டி கண்டனர். நிருபர்களில் ஒருவர், "எங்கள்

பரிசுத்தவான்களால் இதை செய்யமுடியும் என்று நினைக்கிறீர்களா?” என்று கேட்டார்.

நான், “அவர்கள் உயிரோடிருந்தால்” என்று விடையளித்தேன்.

அவர்கள், “மரிக்காமல் யாரும் பரிசுத்தவானாகிவிட முடியாதே” என்றனர், பார்த்தீர்களா? ஜனங்கள்...

★★★★★

*Only believe,*
*Only believe*
*All things are possible,*
*Only believe.*

சகோ. பினேகாஸ்
போன்: 8838623242,
9551855108
Email: jebakumarsa@gmail.com
www.thefinish.in